பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1:25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 26 மாசி 5 ஜனவரி 14 இதழ் 6
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 17-2-84

வெளியீட்டுப்பகுதி
பொதுநூலகம்

## இ.போ.ச.-யாழ். மாநகரசபை 'லடாய்'!
### நவீன மலசலகூட வேலைகள் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில், யாழ். மாநகரசபையினால் சுமார் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டுவரும் நவீன மலசலகூட வேலைகள், இ. போ. ச. மேலிடத்து உத்தரவைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டுள்ளது.

முன்பு பஸ் நிலையத்திலிருந்த மலசலகூடம் இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தினமும் பஸ் நிலையத்திற்கு வந்துபோகும் 10,000க்கு மேற்பட்ட பிரயாணிகள், குறிப்பாக பெண்களும், வயோதிபர்களும் மலசலகூடமில்லாமல் நீண்டகாலம் கஷ்டப்பட்டு வந்தனர்.

கடந்த யாழ். மாநகரசபை வரவு செலவுத் திட்டத்தின் யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சீ. வி. கே. சிவஞானம் அதே இடத்தில் மீண்டும் நவீன மலசலகூடம் கட்ட ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபா ஒதுக்கியதோடு இ. போ. ச. வடபிராந்தியத் தலைவருடன் தொடர்புகொண்டு அதற்கான நிலத்தையும் பொறுப்பேற்று

(8-ம் பக்கம் பார்க்க)

# சுதந்திரக்கட்சி மனமாற்றம்:
# சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றலாம்!

(நமது சிறப்பு நிருபர்)

**தமிழர் பிரச்னை சம்பந்தமான சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்று எடுக்கப்பட்ட முடிவை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கைவிடலாம் என்று, சுதந்திரக்கட்சியுடன் நெருங்கிய வட்டாரங்கள் 'ஈழநாடு'விடம் நம்பிக்கை தெரிவித்துள்ளன.**

சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்ற முடிவைக் கைவிட்டு மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு மாநாட்டுச் செயலாளர் நாயகம், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை நேரில் சந்தித்து அழைப்பு விடுத்திருந்தது தெரிந்ததே. இச் சந்திப்பு கடந்த திங்கட்கிழமை நடந்தது.

நாளை சனிக்கிழமை, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அரசியல்குழு கூடும்போது. ஓர் சாதகமான முடிவே ஏற்படலாம் என்று சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

### சட்டமேலவை துணைத் தலைவர்

சென்னை, பெப். 16

தமிழ்நாடு சட்ட மேலவை துணைத்தலைவராக அ. தி மு.

(8ம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத மின்பாவனை: பலருக்கு மின்துண்டிப்பு!

(கோண்டாவில்)

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபை கொக்குவில் உப பணியக எல்லைக்குள் வீட்டில் இருந்து கடைக்கு மின்சாரம் பாவித்த பலரின் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதேபோல மின்மானியில் மாற்றம்செய்து மின்சாரம் பாவித்த பல தொழிற்சாலைகளும் கண்டுபிடிக்கப்பட்டு மின் துண்டிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் துண்டிக்கப்பட்டவர்களுக்கு ஐநூறு ரூபா செலுத்திய பின்னரே மின்சாரம் வழங்கப்படுகின்றது.

(8-ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிமுனையில் மோட்டார்சைக்கிள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் நேற்று முன்தினம் கந்தர்மடம் சந்திக்கும் பல்கலைக்கழக சந்திக்குமிடையில் துப்பாக்கிமுனையில் மோட்டார் சைக்கிள் ஒன்று கொள்ளையடிக்கப்பட்டது.

பகல் 12 மணிக்கு ஒருவர் மோட்டார் சைக்கிளில் சென்றபோது வீதி நடுவில் இரு இளைஞர்கள் மறித்ததாகவும், மோட்டார் சைக்கிளைத் தரும்படி கேட்டதாகவும் "எதற்குத் தேவை" என்று திருப்பிக் கேட்டபோது துப்பாக்கியைக் காட்டியதாகவும் கூறப்படுகிறது.

பின்னர் இரு இளைஞர்களும் மோட்டார் சைக்கிளைக் கடத்திச் சென்றனராம்.

இதுபற்றி நேற்று யாழ். பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது. [க]

## மோட்டார் சைக்கிள் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் துப்பாக்கி முனையில் நேற்றுமுன் தினமிரவு மற்றொரு மோட்டார் சைக்கிளைக்கடத்திச் சென்றுள்ளனர்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அமிர்தலிங்கம் தர்மகுலசிங்கம், இச்சம்பவம் பற்றி நேற்றுக்காலை யாழ் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு கல்லுண்டாய் வெளியில் தான் மோட்டார் சைக்கிளில் சென்றபோது இரு இளைஞர்கள் மற்றொரு மோட்டார் சைக்கிளில் துரத்திவந்து தடுத்துநிறுத்தி துப்பாக்கி முனையில், தமது மோட்டார் சைக்கிளை கடத்திச் சென்றதாக அவர் புகாரில் தெரிவித்துள்ளார். (க)

### யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி
# அதிதீவிர சிகிச்சைப்பிரிவுக்கு நியூஸிலாந்து அரசு உதவி

(யாழ்ப்பாணம்)

''பெரும் உதவிகளை அரசின் அனுமதி பெற்றே செய்ய வேண்டும். எங்களுக்கு முடிந்த இதுபோன்ற சிறிய உதவிகளை எங்கள் சொந்த விருப்பத்துடன் செய்யலாம். இனிமேலும் இப்படியான சிறிய உதவிகளை அவசியம் உள்ளதாக இருந்தால் செய்வோம்''

யாழ். பெரிய ஆஸ்பத்திரி அதிதீவிர சிகிச்சை பிரிவுக்கு 'காடியாக்மொனிற்றர்' என்ற கருவியை நேற்று அன்பளிப்புச் செய்த சிங்கப்பூரிலுள்ள நியூசிலாந்து தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் திரு. லூக்ரெட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரண்டாவது செயலாளர் திரு லூக்ரெட்டுடன் இலங்கையிலுள்ள அவுஸ்திரேலிய தூதரக இரண்டாவது செயலாளர் திரு ஹூடொனும் வந்திருந்தார்.

யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகரும், மற்றும் வைத்திய நிபுணர்கள், டாக்டர்கள், அவர்களை வரவேற்றனர்.

அதிதீவிர சிகிச்சைப்பிரிவுக்கு இதுபோன்ற 6 கருவிகள் தேவையாகும். ஏற்கனவே அங்கு 4 கருவிகள் மட்டுமே உள்ளன. அன்பளிப்புச் செய்யப்படவிருந்த மற்றொருகருவி கடந்த ஜூலை கலவரத்தின் போது கொழும்பில் எரிக்கப்பட்டுவிட்டது. தற்போது வழங்கப்பட்டுள்ள கருவியுடன் 5 கருவிகள் உள்ளன.

இருதய செயற்பாட்டை அறிவதற்கான இக் கருவியை இரண்டாவது செயலாளரிடமிருந்து வைத்திய அத்தியட்சகர் பெற்றுக்கொண்டார்.

இதன்பின் இரண்டாவது செயலாளர் திரு லூக்ரெட் திரு ஹீடொனும் ஆஸ்பத்திரி வாட்டுக்களையும் பார்வையிட்டனர். இவர்கள் குழந்தைகள் வார்ட், சத்திரசிகிச்சைப்பிரிவு அதிதீவிர சிகிச்சைப்பிரிவு, அவசரகால சிகிச்சைப்பிரிவு உட்பட பல வார்ட்டுக்களைப் பார்வையிட்டனர்.

150 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட ஆஸ்பத்திரியின் பழைய கட்டடத்தையும் அவர்கள் பார்வையிட்டனர். ஆஸ்பத்திரியிலுள்ள கஷ்டங்கள், குறைகள், தேவைகள் ஆகியவற்றை நேரில் தெரிந்துகொண்டனர். (க)

## வெள்ளப் பகுதிகளில் மீண்டும் பெரும் மழை

(கொழும்பு)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நேற்று மீண்டும் பெரும் மழை பெய்தது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயமில்லையென்று இம்மாகாணங்களின் அரசாங்க அதிபர்கள் அறிவித்துள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

### ✭ வெள்ள நிவாரண உதவி கிடைக்கவில்லையாம்
# சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனை முற்றுகை கைவிடப்பட்டது!

(சாவகச்சேரி)

வெள்ள நிவாரண உதவிகள் தமக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவித்து. நேற்று முன்தினம் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையை முற்றுகையிட்டிருந்த தாவளை இயற்றாலைப் பகுதியைச் சேர்ந்த சுமார் 75 பேர் தமது போராட்டத்தை இரவு 10 மணியளவில் கைவிட்டனர்.

வெள்ள நிவாரண உதவிகள் சரியானமுறையில் வழங்கப்படுவதற்கான சகல நடவடிக்கைகளையும் தாம் எடுப்பதாக சாவகச்சேரி உதவிஅரசாங்க அதிபர் திரு துரைராஜா உறுதிமொழி அளித்தமையைத்தொடர்ந்தே முற்றுகையாளர்கள் உதவி அரசாங்க அதிபர் பணிமனை வளவை விட்டுச் சென்றனர்

இதுவிடயத்தில் த. வி. கூ. தொகுதித் தலைவர் திரு ஏ. கே. இராமலிங்கம் வெள்ள அகதிகள் சார்பில் உதவி அரசாங்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடாத்தியதன் பேரிலேயே இவ்வாறான வாக்குறுதி அளிக்கப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

## காவலூர், தெல்லிப்பளையில் வடிசாலைகள் அமைக்கப்படும்

(கொழும்பு)

வடபகுதியில் உற்பத்தி செய்யப்படும் பனம் சாராயத்தை போத்தலில் அடைத்து விற்பனை செய்வதற்கு பனம்பொருள் அபிவிருத்தி சபைக்கு அனுமதி கிடைத்துள்ளது

இதுவரை சாராயத்தைப் போத்தலில் அடைக்கும் வேலையை வடிசாலை கூட்டுத்தாபனமே மேற்கொண்டு வந்தது

இது தொடர்பாக பனம் பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு க. நடராஜா பிரதேச அபிவிருத்தி அமைச்சருக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்து அமைச்சரவையில் மேற்படி அனுமதியை அமைச்சர் திரு செ. இராசதுரை பெற்றுக்கொடுத்திருக்கிறார்

அதேவேளையில் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் பணிப்பின் பேரில் பருத்தித்துறை திக்கத்தில் 30 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ள பனம் சாராய வடிசாலை ஏப்ரலில் உற்பத்தியை ஆரம்பிக்கும் என்று திரு. நடராஜா தெரிவித்தார்

வீணாக ஊற்றப்படும் கள்ளைப் பயன்படுத்தும் நோக்கத்

(8-ம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

ஆங்கிலம் தெரிந்த ரைப்பிஸ்ட் ஆண் தேவை ஓய்வூதியம்பெற்றவர் விரும்பத்தக்கது பாதுகாப்புசேவைக்கு பொலிஸ்சேவையில் இருந்து ஒய்வுபெற்றவரும் தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல 770, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம் 770

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அருகில் வீடு கட்டுவதற்கு உகந்த 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும்: நா. பொன்னம்பலம். சோதி வேம்படி ஒழுங்கை, மானிப்பாய். 756

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலுக்கு அருகாமை - 10½ பரப்பு சதுரக் காணி - உரித்து நன்நது. இரு துண்டுகளாக அல்லது முழுவதும். கே. கே. எஸ் வீதியிலிருந்து 150 யார் உள்ளே. இதம்பர உடையார், பன்னாலை, தெல்லிப்பளை 758

நல்ல நிலையில் உள்ள 70 ஸ்ரீ 8942 குபேட்டா லாண்மாஸ்டர் ரெயிலர், கலப்பை ஆகியவற்றுடன் உடன் விற்பனைக்குண்டு. M. K. செல்லத்துரை, அலுமேனியத்தொழிற்சாலைமுன், மாவிட்டபுரம் 807

ஒருநாள் கோழிக்குஞ்சுகள் Bairaha Farm Hibro புரோயிலர், Hi-Sex Brown பேட்டுக்குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் 19-3-84-ல் பெற்றுக்கொள்ளலாம். உடன் தொடர்பு கொள்ளவும். S. புவனேந்திரன், "சிங்கம் வளவு" கோட் ரோட், மல்லாகம். 854

## தேவை

அனுபவம் மிக்க சமையல்காரர் தேவை. அகதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் நேரில் வரவும். ராகுலசூரியன் இல. 122பிரதான வீதி, பருத்தித்துறை. 759

A/L வகுப்பு மாணவிக்கு பௌதீகவியல் - இரசாயனம் இருபாடங்களும் யாழ் நகரிலுள்ள வீட்டில்வந்து கற்பித்துக் கொடுக்கக்கூடிய ஆசிரியர் தேவை விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 820 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 820

மணிக்குரல் விளம்பர சேவையில் கடமையாற்ற பெண் அறிவிப்பாளர் தேவை. உங்கள் விண்ணப்பங்களை 20-02-84 முன்னதாக அனுப்பி வைக்கவும். நிர்வாகி மணிக்குரல் விளம்பர சேவை, பஸ் நிலையம். யாழ்ப்பாணம். 800

## தேவை

இங்கிலாந்திற்கு குடும்பப் பொறுப்பற்ற பெண் உதவியாளர் ஒருவர் தேவை 45 வயதிற்குள் ரிக்கற், சாப்பாடு இலவசம். அத்துடன் மாத அலவன்ஸ் கொடுக்கப்படும். சபாநாயகம் 466/4, மூத்த தம்பி அவென்யூ, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 846

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிப்பதற்கு சட்டத்தரணி ஒருவரின் சிறு குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. இரண்டு வருடங்கள் ஆகக் குறைந்தளவு காலம். விண்ணப்பிக்கவும். விளம்பர இல; 853, C/o ஈழநாடு லிமிட்டெட் யாழ்ப்பாணம். 853

## காணவில்லை

வெள்ளை நிற இரண்டு அடி உயர் சடை நாய் (Japanese Spitz) 14-2-84 செவ்வாய் இரவு காணவில்லை. தகவல் தருவோருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. பரராஜசிங்கம், மிருகவைத்தியர், பாக்கிய வில்லா, (நந்தாவில் அம்மன் கோவில் ரோட்), கிழக்கு கொக்குவில். 858

## வாடகைக்கு

ஆனைக்கோட்டை சந்தியில் வைத்தியசாலைக்கோ, பாமஸிக்கோ, கடைக்கோ தகுந்த இடம் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு கொடுக்கப்படும் உடன் தொடர்பு கொள்ளவும். கணேசநாதன், "கல்யாணி" ஆனைக்கோட்டை. 833

## FOR SALE

Excellent Condition Lister HA 2 Cylinder Engine coupled to 10 KVA Lister single phase electric start Generator, used Petter PHZ disel 2 Cylinder 10 KVA Generator, New BMC spares for 22/24 Sri Austin / Morris, LD and Boxer Model Brake parts, Valves, Waterpumps, Injector pumps, Bearings Steering wheels, Clutch parts, and many other spares 25% —40% below sale price. Excellent used Lister Sri Engine. Contact: Indran, Pandateruppu (898). 841

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## இளைஞர் நஞ்சுக்குப் பலி

[யாழ்ப்பாணம்]

நீண்டநாள் சுகவீனமுற்றிருந்த ஒரு இளைஞர் நச்சுத்திராவகத்திற்குப் பலியானார்.

கோண்டாவிலைச் சேர்ந்த 20 வயதான கிருஷ்ணபிள்ளை தயானந்தராசாவே பலியானவராவார்.

யாழ் ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவைச்சேர்ந்த கான்ஸ்டபிள் ஜி. சந்தியாபிள்ளைமரணவிசாரணைக்கான ஏற்பாட்டைச் செய்துள்ளார். (க)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற குமாரசாமி நாகலிங்கம் பெண் வள்ளியம்மையின் மரணசாதனவிடயமாக

- காலஞ்சென்றவர்
குமாரசாமி நாகலிங்கம், பிரதான வீதி, பருத்தித்துறை.

- மனுதாரர்

வழ. இல 1086 ரீ

எதிராக

தெய்வப்பிள்ளை மாணிக்கம், பிரதானவீதி, பருத்தித்துறை

- பிரதிவாதி

தெய்வப்பிள்ளை மாணிக்கம், பிரதான வீதி, பருத்தித்துறை

- பிரதிவாதி-மனுதாரர்

எதிராக

குமாரசாமி நாகலிங்கம், பிரதான வீதி, பருத்தித்துறை.

-மனுதாரர்-பிரதிவாதி

மேலே இலக்கம் கொண்ட மரணசாதனச் சொத்தினதும் உரிமைப் பொருட்களினதும் விடயமாக வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் ஆதனங்கட்கும், ஆஸ்திகளுக்கும் பரிபாலன அதிகாரத்தத்துவப் பத்திரம் பெறுவதற்கு மேற்படி மன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறியப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு மாசி மாதம் 21-ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இம்மன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றூனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றீர்.

1984ம் ஆண்டு மாசி மாதம் 9ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
றிச்சேட் ஜெயராசசிங்கம்
பதிவாளர்

வரைவு
R. R. தர்மரட்ணம்
பிரதிவாதி மனுதாரரின் சட்டத்தரணி
806

## அந்தியேட்டிக் கிரியையும் நன்றி நவிலலும்

### திரு. நடராசா தருமராசா

பாண்டியன் தாழ்வு



20-1-84ல் இறைவனடி எய்திய எங்கள்அன்புத்தெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (17-2-84) கீரிமலையில் நடைபெறும். நாளை [18-2 84] அன்னாரின் சபிண்டீகரணம் இல: 7/12 சுவாமியார்வீதி, கொழும்புத்துறை வாசஸ்தலத்தில் இடம் பெறும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். அவரது இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவர்க்கும் எமது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

மனைவி, மக்கள், மருமகன், சகோதரர்கள்.
852

யாழ் மாநகராட்சி மன்றம்
யாழ் பொது சன நூலகத்திற்கு

## தளபாடங்கள் விநியோகம் செய்வதற்கான

# கேள்வி அறிவித்தல்

யாழ் பொது சன நூலகத்திற்கு பின்வரும் மரத் தளபாடங்கள் விநியோகம் செய்வதற்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 6-03-84ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். மரத் தளபாட வேலைகளிலும் தளபாட விநியோகத்திலும் அனுபவம் உள்ளவர்களது கேள்விகளே ஏற்றுக்கொள்ளப்படும்.

| கிறுவர் நூலகம் | எண்ணிக்கை | கேள்விப்படிவக் கட்டணம் | கேள்வி வைப்பு |
|---|---|---|---|
| 1. புத்தக இருக்கைகள் | 20 | ரூ. 25/- | ரூ. 2000/ |
| 2 வட்டமேசைகள் | 20 | 25/- | 750/- |
| 3 கதிரைகள் | 70 | 25/- | 1000/- |
| 4. சஞ்சிகை இருக்கைகள் | 02 | 25/- | 200/- |
| 5. கண்ணாடி அலுமாரி | 02 | 25/- | 750/- |
| 6. ஸ்தல பராமரிப்புமேசை | 01 | 25/- | 1000/- |
| 7. நிர்வாகஸ்தர் மேசை | 01 | 25/- | 500/- |
| 8 நிர்வாகஸ்தர் கதிரை | 01 | 25/- | 400/- |
| 9. விளம்பர பலகை | 02 | 25/- | 200/- |

2. 05-03-84ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிவரை மேற்குறிப்பிடப்பட்ட கேள்விப்படிவக்கட்டணமும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்துவதன் பேரில் மராமத்துப் பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. கேள்விகள் அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'பொதுசன நூலகத்தளபாடங்கள்விநியோகிப்பதற்கான கேள்விகள்'' எனக்குறிப்பிட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு மாநகர ஆணையாளர் மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு அதற்கென வைக்கப்பட்டுள்ள சபையின் கேள்விப்பெட்டியிலோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்புதல் வேண்டும்.

4 மேலும் விபரங்களை மாநகராட்சிமன்ற பொதுசன நூலக காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்
மாநகராட்சிமன்ற ஆணையாளர்,
மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம். 15-02-84. 849

## கலர் பிலிம் சுருள் இனாம்!

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம்சுருள்களை எம்மிடம் PROCESSING AND PRINTING செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர் பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும். PROCESSING ரூபா 30/- P. C. PRINTING ரூபா 6-50.

கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம். (508)

# MACK TRANSPORT LTD.

மாக் டிரான்ஸ்போட் லிமிட்டெட்

ஆரம்பம் 16-02-84 இரவு 8 மணி

C S K மில் முன்பாக யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும்.

பாதுகாப்பான - சௌகரியமான - சொகுசான பஸ் சேவை

யாழ்ப்பாணம் — கொழும்பு — யாழ்ப்பாணம்

ஒருவழிக்கு ரூ 110/- மட்டும்.

★ முருகண்டி கே. ஜீ. சிற்றுண்டிச்சாலையில் போசன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

டிக்கட் பதிவு செய்தல்

**ஸ்ரீமகள் டிரேடர்ஸ்**

158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23572
(843)

# "லெபனுனில் நிலைமை சீரடைய பலதேசப் படைகள் அகற்றப்பட வேண்டும்!"

## ஐ. நா. பிரான்ஸ் பிரதிநிதி வலியுறுத்து!

ஐ. நா., பெப். 16

லெபனுனிலுள்ள பல தேசப் படைகளை அகற்றி அங்கு உறுதியான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனப் படை ஒன்றை நிறுவ வேண்டியதன் அவசியத்தை ஐ நா வுக்கான பிரெஞ்சுப் பிரதிநிதி வலியுறுத்தியுள்ளார் நேற்று ஐ. நா பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திலேயே ஐ நா. பிரெஞ்சுப் பிரதிநிதி மேற் குறிப்பிட்ட விடயத்தை வலியுறுத்தினுர்.

ஐ நா. சபையும், பிரெஞ்சுப் பிரதிநிதியின் ஆலோசனையைப் பெருமளவு ஏற்றுள்ளது. அத்துடன் அதுபற்றி ஆராயவும் அது முடிவு செய்துள்ளது. ஐ நா. பிரெஞ்சுப் பிரதிநிதி, லெபனுனில் பல தேசப் படைகள் இருப்பதனுலேயே அங்கு அரசியல் நிலைமையும், பாதுகாப்பு நிலைமைகளும் சீர்கெட்டுள்ளன வென்று கூறினுர். கூடவே அமெரிக்காவின் போர்க் கப்பல்களும், ஏனைய கடற்படைக் கப்பல்களும் பெய்ரூட் துறைமுகத்திலிருந்து வாபஸ் பெறப்பட வேண்டுமெனவும், அவற்றுடன் அங்குள்ள பல தேசப் படைகளும் வெளியேறவேண்டும் எனவும் அவர் கூறினுர்.

லெபனுனில் நிலவிவரும் பதட்டநிலை பயங்கரமானதொன்று என்றும், இது குறித்து சர்வதேச சமுதாயம் விழிப்படைய வேண்டுமெனவும் அப்பிரதிநிதி மேலும் கூறினுர்.

இதேவேளை லெபனுனில் நாளுக்குநாள் நிலைமை மோசமடைகிறது. முழு லெபனுன் பிரதேசமுமே போர்க்களமாக மாறிவருகிறது கட்டிடங்கள் சின்னுபின்னமாகியுள்ளன சிறிதளவு சேதமாயினும் இல்லாத வாகனத்தைக் காண்பது அரிதாகவுள்ளது கிளர்ச்சிப் படைகளும், லெபனுன் இராணுவமும் எதிர்பாராதவிதங்களில் திடீர்திடீரென எதிர்ப்படுகின்ற விடங்களிலெல்லாம் மோதி வருகின்றன.

இத்தகைய பயங்கர நிலைமை காரணமாக லெபனுனின் மத்திய, கிழக்கு, மேற்குப் பகுதிகளிலுள்ள பொதுமக்கள் தென்பகுதி நோக்கி ஓடிவருகின்றனர். இப்பகுதி இஸ்ரேலிய இராணுவத்தின் வசமுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது

இது இவ்வாறிருக்க, பிரிட்டனின் பி.பி.ஸி. செய்தி நிறுவனம் தகவலொன்றை வெளியிட்டுள்ளது. அதில், லெபனுன் ஜனுதிபதி திரு. அமின் ஜமாயல் கடந்த ஆண்டு மே மாதம் இஸ்ரேலுடன் செய்துகொண்ட படைவாபஸ் ஒப்பந்தத்தை முறிக்கவுள்ளாரென்று குறிப்பிடப்பட்டுள்ளது ஆனுல் லெபனுன் ஜனுதிபதி தரப்பில் இதுபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. (கி)

## பாகிஸ்தானிலுள்ள இந்திய ராஜதந்திரிகளுக்குமிரட்டல்

புதுடில்லி, பெப் 16

பாகிஸ்தானின் கராச்சி நகரில் இந்திய ராஜதந்திரிகள் சிலர் பயமுறுத்தப்பட்டனர் இத்தகவலை இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்று அறிவித்தது.

கடந்த வாரம் காஷ்மீர் தீவிரவாதி மக்பூல்பட் புதுடில்லியில் தூக்கிலிடப்பட்டதன் எதிரொலியாகவே அவர்கள் பயமுறுத்தப்பட்டனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

தீவிரவாதி மக்பூல்ட் தூக்கிலிடப்பட்டதினம் பாகிஸ்தானிலுள்ள இந்திய ராஜதந்திர அலுவலகங்கள் பயமுறுத்தல்களுக்குள்ளாயின. இஸ்லாமாபாத் தூதரகம் தாக்கப்பட்டிருந்தது.

இச்சம்பவங்களையும், பயமுறுத்தல்களையும் அடுத்து இந்திய தூதுவராலயங்கள், ராஜதந்திர அலுவலகங்கள் பாகிஸ்தானில் பலத்த பாதுகாப்புக்குட்படுத்தப்பட்டுள்ளன பாகிஸ்தானிலுள்ள ஏயர் இந்திய விமானச் சேவை அலுவலகமும் பாதுகாப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் இந்திய ராஜதந்திரி திரு. மாந்ரே கொலை செய்யப்பட்டபின்னர் சர்வதேச ரீதியாக இந்திய ராஜதந்திரிகளின் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது (கி)

## ஈராக் போர்விமானங்கள் குண்டு வீச்சு!

### ஈரான்குற்றச்சாட்டு

பக்தாத், பெப். 16

ஈராக்கிய போர் விமானங்கள் அபதான், குரம்ஷார் என்ற தனது இரு நகரங்களில் குண்டு வீசின என்று ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது. இக் குண்டு வீச்சினுல் இவ்விரு நகரங்களிலும் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது காயமடைந்துள்ளனர் என்று அது மேலும் தெரிவித்தது.

ஈரான்-ஈராக் யுத்தம் கடந்த சில நாட்களாக மீண்டும் மும்முரமடைந்துள்ளது. இரு நாட்டுப் போர்விமானங்களும் யுத்த நிலைகள் உட்பட குடியிருப்புக்கள்மீதும் குண்டுகளை வீசிவருகின்றனவென்று கூறப்பட்டது.

இங்கிலாந்திலுள்ள அரபு லீக் அமைப்பு ஈரான் - ஈராக் போர்குறித்துக் கவலை தெரிவித்துள்ளது. இந்த யுத்தத்தினுல் மத்திய கிழக்குப் பிராந்தியம் முழுவதுமே பதட்டத்திற்குள்ளாகியுள்ளது என்று அந்த அமைப்புக் கவலைதெரிவித்துள்ளது

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் ஈரான் - ஈராக் போர் நிலைமை குறித்துப் பெருங் கவலைதெரிவித்துள்ளது இப் போரினுல் இவ்விரு நாட்டு மக்களின் சுதந்திரத்திற்கும், வாழ்க்கைக்கும் பெரும் பயமுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன என்று அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது. (கி)

## இந்திய சோவியத் நூலகங்கள்!

புதுடில்லி, பெப் 16.

சோவியத் யூனியனில் இந்திய நூலகமும், இந்தியாவில் சோவியத் நூலகமும் நிறுவுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் நேற்றுப் புதுடில்லியில் கைச்சாத்தானது.

இந்த நூலகங்களில் இரு நாடுகளினதும் பழைய-நவீன நூல்கள் மற்றும் கலாசார அம்சங்கள் ஆகியன இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இவ்விரு நாடுகளின் நட்புறவு மேலும் உறுதியடைய இந்த நூலகங்கள் துணைநிற்கும் என்றும் கருதப்படுகிறது. [கி]

## அமெரிக்க நடவடிக்கைகள் குறித்து புதிய சோவியத் அதிபர் கண்டனம்!

மாஸ்கோ, பெப். 16

''அமெரிக்காவின் நடவடிக்கைகள் மத்திய அமெரிக்காவில் பெரும் பதட்ட நிலையைத் தோற்றியுள்ளன'' என்று புதிய சோவியத் யூனியன் அதிபர் திரு. ஷெனென்கோ கூறியுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் மத்தியில் பேசும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளை அவர் கண்டித்ததுடன், சர்வதேச ரீதியில் அந்நடவடிக்கைகள் பயங்கரமானவை யென்றும் புதிய சோவியத் அதிபர் அறிவித்தார்.

திரு. ஷெனென்கோ, சோவியத் யூனியன் உலக அமைதிக்கும், இராணுவ சமபலத்தைப் பேணுவதிலும் கடுமையாக உழைக்குமென்றும் கூறினுர்.

மத்திய அமெரிக்க விவகாரம்பற்றி நிக்கரகுவா, கியூபா ஆகியவற்றின் தலைவர்களுடன் மாஸ்கோவில் பிரஸ்தாபித்த பின்னரே திரு. ஷெனென்கோ மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார். (கி)

## தமிழக அமைச்சர் இலாகாப் பொறுப்பு மாற்றம்

சென்னை, பெப் 15

தமிழக அமைச்சர்கள் இருவரின் இலாகாப் பொறுப்புக்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

சட்ட அமைச்சர் திரு. எஸ். பொன்னையன் கைத்தொழில் துறை அமைச்சராக பதவி ஏற்றுள்ளார்.

கைத்தொழில்துறை அமைச்சர் திரு எஸ் திருநாவுக்கரசு கூட்டுறவுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். [வெ]

# "13 ராணுவ வீரர்களின் மரணமே ஜூலை வன்செயல்களுக்கு காரணம்!"

## அமெரிக்க ராஜாங்க அமைச்சு அறிக்கை

[கொழும்பு]

பதின்மூன்று ராணுவ வீரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமையால் ஏற்பட்டதன் விளைவுகளே இலங்கையில் சென்றவருடம் ஜூலை மாதத்தில் இடம்பெற்ற வன்செயல்களுக்குக் காரணம் என ஐக்கிய அமெரிக்க ராஜாங்க அமைச்சு சமீபத்தில் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது

வாஷிங்டனில் இந்த அமைச்சு தனது 162 நாடுகளுக்கான மனித உரிமைகள் சம்பந்தமாக வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் 54 தமிழ்க்கைதிகள் சென்ற ஜூலை மாதம் கொலைசெய்யப்பட்டது பற்றியும் ஜூலை வன்செயல்கள் இடம்பெற்ற சமயத்தில் பாதுகாப்புப் படையினர் பராமுகமாக நின்றமை அல்லது இவற்றில் சம்பந்தப்பட்டமை பற்றியும் குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் தமிழர் விடுதலைக்கூட்டு முன்னணியும் தமிழீழப் பயங்கரவாதிகளும் ஒரே நோக்கமான தனித்தமிழ் ஈழத்தை அடைவதையே நோக்கமாகக் கொண்டிருந்தாலும் அவர்களது அணுகுமுறை வித்தியாசமானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஜூலை வன்செயல்களில் தற்போதைய அரசாங்கம் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்படவில்லை யெனவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது [ஞ]

## உணவு பார்சல்கள் வழங்கினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரித் தொகுதியில் உள்ள வெள்ள அகதிகள் குடும்பங்களுக்கு அறவழிப் போராட்டக்குழு இரவு உணவுப்பார்சல்களை அன்பளிப்புச் செய்தது.

தென்மராட்சி கிழக்குப்பகுதிகளிலுள்ள மொத்தம் 13 முகாம்களுக்கும் குழுவினர் சென்று வெள்ள அகதிகளுக்கு ஆறுதல் கூறியுள்ளனர். (சூ)

## மன்னுரில் வெள்ள நிவாரணம்

(மன்னுர்)

மன்னுர் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக ஏற்பட்ட வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது

வெள்ளநிவாரணங்களை உதவி அரசாங்க அதிபர்கள் தமது பிரிவுகளில் வழங்கிவருகின்றனர்.

## யாழ் நீதிமன்றில் 3 வாகனங்கள் ஒப்படைப்பு!

(யாழ்ப்பாணம்)

சங்கானை வங்கி கொள்ளை நடந்த இரவு கடத்தப்பட்டதாக கூறப்படும் 3 வாகனங்கள் யாழ் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன.

யாழ்ப்பாண பகுதியில் அனுதவராக விடப்பட்டு மறுநாள் கண்டுபிடிக்கப்பட்ட 2 வான்களையும், ஒரு காரையும் யாழ் பொலிஸார் நேற்று யாழ் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

## சந்தை மாற்றப்பட்டது

(மன்னுர்)

மன்னுர் பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் பலத்தமழையினுல் மன்னுர் வாராந்தச் சந்தை மூர்வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது

இதனுல் மூர் வீதியில் சந்தை நாட்களில் போக்குவரத்து தடைசெய்யப்பட்டுள்ளது.

மன்னுர் வாராந்தச்சந்தை நடைபெறுமிடத்தில் வெள்ளம் நிறைந்திருப்பதாலேயே வாராந்தச்சந்தை மூர்வீதிக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (சூ)

## இடமாற்றம்

(மாவிட்டபுரம்)

யாழ் அரசாங்க செயலகத்தின் பிரதம லிகிதர்களில் ஒருவராக கடமையாற்றிய திரு. கே. கந்தசாமி புதிதாக திறக்கப்பட்டுள்ள கிளிநொச்சி அரசாங்க செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### மணிவாக்கு

உன்னுடைய சொந்த மத நம்பிக்கையில் எப்பொழும் வலிவுடன் ஊன்றி நிற்பதாக நிலைத்திரு. ஆனால் மதவெறி சகிப்புத் தன்மையில்லாமை இவற்றை முற்றிலும் தவிர்த்துவிடு.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## குருமனை இரட்டைக் கொலை

இந்நாட்டில் கொலைக் குற்றம் அதிகரித்துவருவதையிட்டு பல கருத்துக்கள் காலத்துக்குக்காலம் உரைக்கப்பட்டு வருகின்றன.

கொலைபோன்ற அக்கிரமங்களைத் தடுக்க அறவாழ்வுக்குரிய சமுதாய சுவாத்தியம் அருகிப்போவது ஒரு கருத்து; இதற்கு அத்திபாரமான சமயவாழ்வு குன்றி வருவது குறிப்பிடப்பட்டு வருகின்றது.

இதில் உண்மையில்லாமலில்லை. பயிர்செய்கையில் நிலத்தைப் பண்படுத்தும் பணிபோன்றது அது. ஆனால் எந்த விளை நிலத்திலும் வளரும் பயிரைப்பாதுகாப்பது உழவனின் முதற் கடமை; பெரும் பொறுப்பு.

அக்கிரமங்கள் அதிகரித்துவருவதையிட்டு அரசு கவலைகொள்ள வேண்டும். தடுப்பு நடவடிக்கையும் யும் தண்டனைத் தீவிரமும் மிக முக்கியமானவை. இவை குறைந்து வருகின்றன என்பது முக்கிய முறைப்பாடாய் விட்டது.

ஜனநாயக ஆட்சியின் பலவீனம் எத்துறையும் துரிதமாக தீவிரமாகச் செயற்படுவதில்லையென்பது அது உண்மையானாலும் தனிமனிதனின் பிறப்புரிமை பாதுகாக்கப்பட வேண்டியதால் சட்டஆட்சி மயிரிழையளவும் விலகாது நடைபெற வேண்டுமென்பதால் நீதிமன்றங்கள் உட்பட பல நிர்வாகத்துறைகளும் தாமதமாகவே பணியாற்றுகின்றன.

ஒரு கொலை வழக்கின் தீர்ப்பு வழங்கப் பலவருடங்கள் செல்கின்றன. குற்றத்துக்குரிய தண்டனை வழங்கும் கட்டத்தில் குற்றவாளியே இவ்வுலகில் காணப்படுவதில்லை. இவ்வித தாமதத்துக்குப் பல குறைகள் இன்று காரணமாகின்றன. குற்ற அதிகரிப்பு இதன் விளைவென்பதில் உண்மை உண்டு.

இந்த அடிப்படையில் இந்நாட்டின் வரலாற்றில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய குருமனை இரட்டைக் கொலைவழக்கு பல வருடங்களுக்குப் பின்னாவது முடிவடைந்தது பெரும் அதிசயம்; 165 நாட்கள் நடந்த வழக்கு! முந்தநாள் வெளியான தீர்ப்பு 612 பக்கங்களைக் கொண்டது. மூன்று நீதிபதிகள் தம் தீர்ப்பை மாறி மாறி எட்டரை மணித்தியாலம் வாசித்தனரென்றால் இதன் விபரீதம் இருந்தவாறென்னே!

சட்ட நுணுக்கங்களில் திறமையற்ற நாம் அப்படி நினைப்பதுஇயல்பு. உண்மையில்கொலைவழக்குசாதாரணமாக ஜூரிமார் கொண்டு விளங்கப்படுவது; ஆனால் இது 'ட்ரயல் அட் பார்' (Trial-at-Bar) விளக்கமானதால் இவ்வித நீண்ட தீர்ப்பு அளிக்கவேண்டிய அவசியம் உண்டென நீதிபதிகள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

உண்மையில் இது இரு கொலை வழக்குகளே! இரண்டும் இணைந்த ஒரு வழக்கானதால் அது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதும், ஒரு வகையில் சிக்கலாகவும். இன்னொரு வகையில் சிக்கலை நீக்க உதவும் அம்சங்களைக் கொண்டதால், பலமும் பலவீனமும் ஒருங்கமைந்திருந்தன

இந்த வழக்கை மிகச் சாமர்த்தியமாக நடத்தி முடித்ததையிட்டு இதில் தொடர்பான நீதிபதிகள் தொடக்கம் சாதாரணசாட்சிகள் வரைக்கும் எல்லோரையும் பாராட்ட வேண்டும்.

பத்திரிகைகள் பல விளக்கத்தின் வரலாற்றைத் தாராளமாக பிரசுரித்திருந்தன. வாசகர்களின் மனநிலை எவ்வாறு காணப்பட்டது?

எதுவும் மர்மமெனக் கொள்ளப்படும் போக்கு நீண்டகால விசாரணையில் தென்படவில்லையெனலாம்.

திட்டமிட்ட கொலையென்றும் எனவே குற்றவாளிகள் இருவரும் தூக்கிவிடப்பட வேண்டுமென்ற தீர்ப்பு, வழக்கை உன்னிக் கவனித்தவர்களுக்கு எவ்வித அதிர்ச்சியையும் ஏற்படுத்தமாட்டாது.

ஜூரிமார் கொண்டவிளக்கமாயிருந்தால் விடயம் வேறாகலாம். அது எவ்வாறாயினும் இந்த வழக்குக்கு மிக அவசியமான சாட்சிகள் மருத்துவ அறிக்கைகள், வைத்திய நிபுணர்கள், பொலிஸாரின் பணிகள், யாவும் மிகத் திறமையாகவும் துரிதமாகவும் தயார் செய்யப்பட்டமை பெரும் பாராட்டுக்குரியது.

இரு தரப்பிலும் ஏற்பட்ட சட்டத்தரணிகள் தங்கள் பொறுப்பைச் செயற்படுத்த நீதிபதிகள் அளித்த பேருதவி குறிப்பிடப்பட வேண்டியது.

அரச தரப்பின் சட்டத்தரணியின் பொறுப்பே குற்றத்தை நிரூபிப்பது; அவருடைய முக்கிய வாதம்; குற்றவாளிகள் இருவரின் காதலே இந்த இரட்டைக் கொலைக்கு முக்கியகாரணம் என்பது. விபத்துமல்ல, இயற்கை மரணமுமல்ல; திட்டமிட்ட கொலை என்பதே தீர்ப்பானதால், மருத்துவ அறிக்கைகள். வைத்திய நிபுணரின் சாட்சியம் யாவும் தம்முடைய வாதத்துக்குச் சார்பாக அரச சட்டத்தரணி பயன்படுத்திய திறமை தெளிவாயிருந்தது

சமூகத்தின் தராசுகோல் நீதிமன்றம்; நியாயம் வழங்குவதை அது குறிக்கின்றது; அதுமட்டுமல்ல சமூக வாழ்க்கை சட்டத்துக்கமைய வேண்டும். சட்டம் சமூகத்தின் தார்மீக வாழ்வுக்கு உதவ வேண்டும் என்பது அடிப்படைக் கருத்துக்கள்.

குடும்ப வாழ்க்கை—கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள் உறவு போன்ற அசையாத அத்திவாரத்தில் அமைந்துள்ளது; குடும்பம் சமுதாயத்தின் ஆணிவேர்; இதற்கு அழிவேற்பட சட்டம் விடுமாயின் சமூகம் குலைவது திண்ணம்.

இக்காலநாகரிகவாழ்க்கை பற்றி கவலை கொள்ளும் பலருக்கு இவ் வழக்கு ஒரு தேற்றமும் நம்பிக்கையும் அளிக்கும் பாடமாகும்.

நாணமும் நல்ல மன உறுதியுமாகிய இரண்டு தெப்பங்கள் காமம் என்ற கொடிய கல்லில் மோதி விடுமானால் தப்பாது மூழ்கி விடுமென்பது பொய்யா மொழி.

# "உயர்மட்டத்தில் உள்ளோர் சமூக சேவையில் நாட்டம் கொள்ளவேண்டும்!'

## லயன்ஸ் மாவட்ட ஆளுநர் உரை

(நல்லூர்)

"சாதாரண மக்களின் நோயை, வறுமையை, கஷ்டங்களைக் கண்டு நாம் பராமுகமாக விருந்தோமானால் அவர்களின் துன்பங்கள் பன்மடங்காகிவிடும். ஆகையினால் சமுதாயத்தில் பொருள் வளத்தால், தொழிலால், கல்வியால், அதிகாரத்தால் உயர் மட்டத்தில் உள்ளவர்கள் சமூக சேவையில் நாட்டங்கொள்ளவேண்டும்".

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினால் "பிரச்சினை காலத்துத் தலைமைத்துவம்" என்ற தலைப்பில் ஒழுங்குசெய்யப்பட்ட கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்ட மாவட்ட ஆளுநர் கலாநிதி வாமி இஸ்மாயில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். திரு. கே. குணரத்தினம் தலைமையில் இக்கருத்தரங்கு யாழ்ப்பாணம் "யாம்கோட்"டில் நடைபெற்றது.

கலாநிதி வாமி இஸ்மாயில் தொடர்ந்து கூறியதாவது:-

"எமது நாட்டில் வெள்ளம், புயல், வகுப்புக் கலவரம், தொற்றுநோய் ஆகியவை தலை தூக்கியபோது லயன்ஸ் கழகம் உருப்படியான செயல்களைச் சாதித்துள்ளது. ஒரு தனி மனிதன் சாதிக்க முடியாதவற்றை ஓரியக்கம் சாதிக்க முடியும். தொழுநோய் ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்குள்ள நோயாளர்களுக்கு ஆறுதல்கூற எத்தனை தனிமனிதர்கள் முன்வருவார்கள்? குருடர், செவிடர், ஊமைகள் போன்ற சமுதாயத்தில் உள்ள பின்தங்கியவர்களுக்கு எத்தனை தனிமனிதர்கள் மதம் பூட்ட முயல்வார்கள்? ஆனால் அத்தனிமனிதர்கள் லயன்ஸ் கழகம் போன்ற அனைத்துலக இயக்கமாக ஒருங்கிணைந்தால் பாரிய சமுதாயசேவை ஆற்ற முடியுமல்லவா? சமுதாய சேவைமூலம்தான் ஒருவன் உண்மையான பெருமையை அடையலாம்" என்றார்.

திரு. எம். ஜே. ஏ. ஜெயநாதன் பேசுகையில் கூறியதாவது:-

"பிரச்சினை காலங்களில் மக்களுக்குத் தேவை திடசங்கற்பம். பிரச்சினை காலத்தில் மனம் சோர்வுற்றுத் தன்னம்பிக்கை இழக்கக்கூடாது. வேறெந்தச் சூழ்நிலையிலும் பார்க்கப் பிரச்சினை காலத்தில்தான் தலைமைத்துவம் அவசியமாகிறது. அடிமட்டத்தில் இருந்து தலைமைத்துவப் பண்புகள் வளர்க்கப்படல்வேண்டும். 'மனிதன் இறக்கும்வரைக்கும் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும்' என்றார் நேருஜி. சமுதாயத்தில் காலத்திறகுக் காலம் பிரச்சினைகள் பல்வேறு வடிவங்களில் தோன்றும். அவற்றுக்கு அறிவு பூர்வமாக, திடசங்கற்பத்துடன். தியாக உணர்வுடன் முகங் கொடுக்க வேண்டும். எமக்கு ஒரு கட்டுப்பாடுண்டு. மக்கள் சேவை என்ற வாக்குறுதி உண்டு. 'இருட்டைக் கண்டு திட்டி, காலத்தை வீணாக்குவதிலும்பார்க்க ஒருமெழுகுவர்த்தியை ஒளிவிடச் செய்வது நல்லது' என்ற சீனப் பழமொழியை நனவாக்குவோம்" என்றார்.

### வெள்ளிச் சிந்தனை

## பாராயணச் சிறப்பு

அருள் நூல்களைப் பாராயணம் செய்து மனிதப்பிறப்பின் பயனை அடைந்தவர் வன்றொண்டன் செட்டியார். நாவலர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஆகியோரின் மாணவரான இவர் மிக இளமையிலேயே கண்பார்வையை இழந்திருந்தார் தன்னாசிரியர்களிடம்பாடம்கேட்டதைஞாபகத்தில் வைத்திருந்து தமிழறிஞராய் விளங்கிய வன்றொண்டன் செட்டியார் தேவாரம், திருமுருகாற்றுப்படை முதலிய நூல்களை சிரத்தையுடன் பாராயணம் செய்த சிறப்பால் தன் இறுதியை ஆறு மாதங்களுக்குமுன்பே உணர்ந்தார். தான்விரும்பியபடி மதுரையை அடைந்து வைகைமணலில் தருப்பையாசத்தில் இருந்து சிவத்தியானம் செய்தவண்ணமே தன் உயிரை விட்டார். சிறந்த ஞானிகள் யோகிகள் விரும்பியும் அடையமுடியாத பேற்றை வன்றொண்டன் செட்டியார் தன்பாராயண மார்க்கத்தால் அடைந்தது போன்று; கல்வி, செல்வம், அதிகாரம்உத்தியோகம், மனத்தூய்மை, நல்வாரிணக்கம் முதலிய பயன்களைப்பலர் தாம் விரும்பியவாறே அடைந்திருக்கின்றனர்.

பெரும் முயற்சி செய்யாது சிறந்த பயன் எதையும்அடைய முடியாது என்பதை தெய்வீக விடயத்திலும் கைக்கொள்ள வேண்டும். சங்கீதம், கணிதம், இலக்கியம் முதலியவற்றில் தேர்ச்சி பெறஒவ்வொரு விடயத்தையும் திரும்பத்திரும்ப அப்பியாசம் செய்தல்போன்று அருள்நூல்களில் தமக்கு விருப்பமான பொருத்தமான வற்றைப் வழிபாட்டுணர்வுடன் படித்தலே பாராயணம் செய்தல் எனப்படும். திருமுறைப் பதிகங்கள் திருமுருகாற்றுப் படை, விநாயகரகவல், அபிராமி அந்தாதி முதலியவற்றை பாராயணத்தின் பொருட்டுத் தெரிந்தெடுக்கலாம்.

தினமும் காலையோ மாலையோ புனிதமாக இருந்து பாராயணம் செய்து தான் பிறகடமைகளில் ஈடுபடுவது என்ற நியதியை ஒருவர்கடைப் பிடித்தால் அவர் இறையருள் பெறுவது உறுதி.

நல்லிசை ஞானசம்பந்தனும்
நாவினுக்கரசனும் பாடிய
நற்றமிழ் மாலை
சொல்லியவேசொல்லிஏத்துகப்
பானை தொண்டனேன்
அறியாமை அறிந்து
கல்லியல்மனத்தைக்கசிவித்துக்
கழலடிகாட்டிக் களைகளை
அறுக்கும்
வல்லியல் வானவர் வணங்க
நின்றுனை வலிவலம் தன்னில்
வந்துகண்டேனே

— சுந்தரமூர்த்திநாயனார்.

அருளாளன்.

# யாழ். இந்து, திருக்கேதீச்சரம் தந்த ஸ்ரீ பசுபதிச் செட்டியார்

### இன்று நினைவுதினம்

14-03-1960-ல் வெளிவந்த இந்துசாதனத் தலையங்கத்தில் "சிறந்த சைவாபிமானப் பிரபுவும், பரம்பரைச் செல்வருமான பசுபதிச்செட்டியார் அவர்கள், 13-03-1906 காலை தாம் இடையறு அன்புடன் பூசித்துவந்த நடராஜப் பெருமானின் குஞ்சிதபாத நிழலை அடைந்துவிட்டனர். ஐயையோ! இப்புண்ணிய புருஷரைப்போல் கூர்ந்த விவேகமும், ஆழ்ந்த பக்தியும் மன உறுதியுமுடைய ஒருவரை நாம் இனிக்காணப் பெறுமோ" என்ற பகுதி காணப்படுகின்றது.

சிவபூஜா துரந்தரர் ஸ்ரீ பசுபதிச்செட்டியார் அவர்கள் சைவப்பிள்ளைகள் தம் சமயாசார வழியே கல்வியைப்பெற 1890-ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலே ஒரு இந்துக்கல்லூரியை நிறுவி, மதுரையில் அமைத்துள்ள "திருமலை நாயக்கன் மஹால்" போன்று பிரார்த்தனை மண்டபத்தையும், மேல்மாடியையும் கட்டுவித்தார். இம்மண்டபங்கள் இன்றும் இக்கல்லூரியிலேயே மிகப் பெரிய பார்வையான கட்டிடங்களாகத் திகழ்கின்றன. தம்முடைய கண்ணைப்போல இந்துக்கல்லூரியை மதித்து வந்த இவர், கல்லூரியின் பரிசளிப்பு விழாவுக்கென, யாழ்ப்பாணம் பெரியகடையில் தமக்கிருந்த கிட்டங்கிகளில் ஒன்றினை நன்கொடை செய்தார். இன்றும் அக்கிட்டங்கி வாடகைப்பணம் பரிசளிப்பு விழாவிற்குப் பயன்பட்டுவருகின்றது

"திருக்கேதீச்சரம் அழிந்து காடாய்க்கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோவில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்தப் புண்ணிய தலத்தை சிறிதும் நினையாதென்னையோ!"—? என்று நாவலர் பெருமான் எழுதிய விண்ணப்பம் செட்டியாரின் கண்ணையும், கருத்தையும் கவர இந்துக் கல்லூரிப் பணி நிறைவெய்தியவுடன் திருக்கேதீச்சரத்தில் தன் கவனத்தைத் திருப்பினார். அழிந்திருந்த இடமே தெரியாது மறைந்து போன திருக்கேதீச்சரம் கோவில் நிலத்தை அரசாங்கத்திடமிருந்து வாங்குவதில் சைவ பரிபாலனசபை "இந்து சாதனப்" பத்திரிகை மூலமாகவும், பிறவழிகளிலும் முன்னின்று உழைத்தார். அங்ஙனம் விலைக்கு வாங்கிய நிலத்தில் ஆலயம் இருந்த இடத்தைத் தேடுவதில் தம் ஆருயிரையே அர்ப்பணம் செய்யுமளவிற்குப் பாடுபட்டவர்.

அவர் செய்த சிவப்பணியின் பேறாக, இன்றும் அவர் நினைவாக கேதீச்சரத்தில், அவர் சிவபதமெய்திய மாசிமக புண்ணிய தினத்தில் சுவாமி, அம்பாளுக்கு விசேட அபிஷேக, ஆராதனைகள் நடைபெற்றுவருகின்றன

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, திருக்கேதீச்சரம் ஆகிய இரண்டின் சிவப்பணிகளிலேயே தன் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்டவர். ஸ்ரீபசுபதிச் செட்டியார். அவரது இப்பணியை இன்றும் தொடர்ந்து அவரது வழித்தோன்றல்கள் செய்து வருகின்றனர். யாழ். இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள "பைரவர் கோயில் திருப்பணி" இப்பணிகளில் ஒன்றாகும்.

–சித. மு. சிவபசுபதி

## தமிழ் கட்சிகள் குழு கூடியது

(கொழும்பு)

சர்வகட்சி மகாநாடு தொடர்பாகத் தமிழ்க்கட்சிகள் குழு கூடி ஆராய்ந்தது இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் காங்கிரஸ், இ. தொ. கா. ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

இக்குழுக்கூட்டம் இரண்டரை மணித்தியாலங்கள் நடைபெற்றது. (இ-ல)

ஜூலைக் கலவரத்தின் எதிரொலி:

# 'வீடமைப்பு உதவியே உடனடி அவசியதேவை!'

## — பிரட்மன் வீரக்கோன்

(இ. கந்தசாமி

கடந்த ஆண்டு ஜூலை இனக் கலவரத்தினால் பல்லாயிரக் கணக்கான வீடுகளை இழந்துள்ளமையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களில் வீடமைப்பு உதவியே உடனடி அவசியதேவையாக உள்ளது. இந்நிலையில் பர்மிய அரசாங்கம் வழங்கியுள்ள ஒட்டுப்பலகைகள் எமது நிவாரண வேலைகளில் முக்கியமான பங்கைச் சமாளிக்க உதவும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு பிரட்மன் வீரக்கோன் கொழும்பு கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபன தலைமையகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

பர்மிய அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ் சுமார் ஐயாயிரம் அமெரிக்க டாலர் பெறுமதியான ஒட்டுப் பலகைகளை இலங்கையிலுள்ள பர்மியத் தூதுவர் திரு வைமங்ஜி இவ்வைபவத்தில் திரு வீரக்கோனிடம் கையளித்தார்.

பர்மிய அரசு வழங்கியுள்ள இந்த ஒட்டுப்பலகைகள் கலவரத்தில் சேதமாக்கப்பட்ட வீடுகளைத் திருத்தியமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் என்றும் திரு வீரக்கோன் கூறினார்.

பர்மிய தூதுவர் பேசுகையில் கூறியதாவது:

பல்லாண்டு காலமாக சமய ரீதியிலும் கலாசார ரீதியிலும் இலங்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள பர்மிய மக்களின் சார்பில் இச்சிறு அன்பளிப்பை கையளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் கண்டு பர்மிய மக்கள் தமது இதயம் கலந்த நல்லாசிகளுடன் இந்த உதவியை வழங்கியுள்ளனர்.

கலவரத்தினால் அகதிகளான இலங்கை மக்களினது வீடுகளில் பர்மியமக்களின் நினைவு நீடித்துநிற்கும் வகையில் இந்த உதவி அமைந்துள்ளதையிட்டு எமது மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத் தலைவர் திரு அஜந்தா விஜயசேனவும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டார்.

## மூன்று மாதப் பயிற்சி

(மாவிட்டபுரம்)

பனம்பொருள் அபிவிருத்திச் சபையினால் யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடத்தப்படும் பனைத்தொழில் பற்றிய 3 மாதப் பயிற்சியில் தெல்லிப்பழை தெல்லு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர் திரு. செ. ஜெயராஜா பங்குபற்றிப் பயிற்சி பெற்று வருகிறார்.

இச்சங்கத்தின் சார்பில் இவர் ஒருவரே மேற்படி பயிற்சியில் கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது.

## நிவாரண நிதி முத்திரைகள்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வன்செயலால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அனைத்துப்பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்கள் ஒன்றியம் நிதிசேகரிப்பதில் இறங்கியுள்ளது.

நிவாரணநிதி முத்திரைகளை விற்பனை செய்தே நிதி வசூலிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஐந்து லட்சம் நிவாரணநிதி முத்திரைகள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும், இவற்றைப் பெற்றுக்கொண்டு தாராளமாக நிதிவழங்குமாறும் யாழ் பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் திரு. சு. சிறிஸ்கந்தராசா விடுத்தவேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

## மன்னார் செய்தி

### சுவர் வீழ்ந்து சிறுவன் மரணம்

இடிந்து விழும்நிலையிலிருந்த மண்சுவரை முட்டுக்கொடுத்து நிமிர்த்த முயன்றபோது சுவர் இடிந்து விழுந்ததால் 12வயதுச்சிறுவன் சுவரில் நசியுண்டு ஸ்தலத்திலேயே மரணமானார்.

மரணமானவரின் சகோதரன் பலத்த காயங்களுடன் அனுராதபுரம் அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் மன்னார் வேப்பங்குளம் கிராமத்தில் இடம் பெற்றது.

சம்பவத்தின்போது மரணமான சிறுவனின் மரணம் தொடர்பாக மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி அகமது லெப்பை விபத்து மரணமென தீர்ப்பளித்தார்.

### இராணுவத்தினர் சோதனை

கப்பல்மார்க்கமாக இந்தியாவுக்குச் செல்லவென தலைமன்னார் துறைமுகத்திற்கு வரும் இளைஞர்களில் சந்தேகத்திற்கிடமான முறையில் காணப்படுவர்களின் பொதிகளை இராணுவத்தினர் சோதனை செய்து வருகின்றனர்.

இப்பரிசோதனை தலைமன்னார் துறை சுங்கப்பகுதி மண்டபத்திற்கும் இராமானுஜம் கப்பல் நிற்கும் இடத்திற்கு மிடையிலேயே நடைபெற்று வருகிறது.

### திருடப்பட்ட பொருட்கள் மீட்பு

மன்னார் பெற்று பகுதியிலுள்ள வீடுஒன்றினுள் இருந்து ஒரு மாதத்திற்கு முன்பு திருடப்பட்ட 1014 ரூபாபெறுமதியான பொருட்களை மன்னார் பொலிசார் கைப்பற்றினர்.

இப்பொருட்களையாவும் மன்னார் உப்புக்குளம் பகுதியிலுள்ள கடை ஒன்றிலிருந்து மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரி எஸ். திருச்சிற்றம்பலம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் கைப்பற்றினர்.

இத்திருட்டுச்சம்பவம்தொடர்பாக சுப்பிரமணியம் செல்வராஜா என்ற நபரை கைது செய்து பொலிசார் புலன் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

### கஞ்சா வைத்திருந்தவர் ராணுவத்தினரால்கைது

மன்னார் பஸ் நிலையத்தில் ஒரு கிலோ எடையுள்ள கஞ்சாவை வைத்திருந்த நபர் ஒருவரை கைதுசெய்த இராணுவத்தினர் சந்தேக நபரையும், கைப்பற்றப்பட்ட கஞ்சாவையும் மன்னார் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்

மன்னார் உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த ரசீட் என்பவரே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவராவர்.

சந்தேக நபரை மன்னார் பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

## இலங்கையருக்கு சர்வதேச பௌதிகவியல் பரிசு!

(யாழ்ப்பாணம்)

இலங்கையரான டாக்டர் ஜீவா எஸ். ஆனந்தன் சர்வதேச பௌதிகவியல் போட்டியொன்றில் 1983-ம் ஆண்டுக்கான முதற்பரிசைப் பெற்றுள்ளார். இப்பரிசை அமெரிக்க புவியீர்ப்பு ஆராய்ச்சி மன்றம் வழங்கிக் கௌரவித்துள்ளது. இதனை முதல் தடவையாகப் பெற்ற இலங்கையரும் டாக்டர் ஜீவா ஆனந்தன் என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் ஆனந்தன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கணிதபாடத்தில் முதல் வகுப்புச் சிறப்புச் சித்தி பெற்றவர். அமெரிக்க பிறஸ்பேர்க் பல்கலைக் கழகத்தில் பௌதிகவியல் பி. எச். டி. பட்டம் பெற்றார். அமெரிக்காவின் மேரிலாந்து பல்கலைக் கழகம், கலிபோர்ணியா, பேர்க்ளி பல்கலைக் கழகங்களில் பௌதிகவியல் பீட பொறுப்பாளராகவும், பேராசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். தற்போது மேற்கு ஜெர்மன் மூனிச் நகரில் உள்ள பௌதிகவியலுக்கான 'மக்ஷ் பிராங்' நிறுவனத்தில் இவர் கடமையாற்றுகிறார்.

டாக்டர் ஆனந்தன் வெள்ளவத்தை டாக்டர் ஏ. சதாசிவத்தின் மருமகனும் யாழ்ப்பாணம் முகாந்திரம் ஈ. பி. இராசையாவின் பேரனுமாவார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## பனையின் நுட்பங்களைப்பயில ஐவர் இந்தியா செல்வர்!

(மாவிட்டபுரம்)

பனையின் பயன்பாடுகள் தொடர்பான தொழில் நுட்பப் பயிற்சியைப் பெறுவதற்காக இங்கிருந்து 5 பேர் இந்தியாவுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டின் பேரில் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அகில இந்திய கதர் கிராம கைத்தொழில் கமிஷனின் கடலூரில் நடப்படும் பனந் தொழில் பயிற்சி நிலையத்தில் இவர்களுக்கு மூன்று மாதப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சியின்போது பனந்தும்பு தயாரித்தல், நுங்கோ முதலான கைத்தொழில்கள், ஓலைப்பொருட்கள் ஆகியன தொடர்பான பயிற்சியை இவர்கள் பெறுவார்கள்.

இந்தியாவுக்குப் பயிற்சிக்கு அனுப்புவதற்கான தகுதியானோரைத் தெரிவுசெய்யும் வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மானிப்பாய்

## ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய சங்காபிஷேகம்

ஈழத்திருநாட்டின் வடமாநிலத்தில் சைவமும் தமிழும் செழித்தோங்கும் யாழ்ப்பாணத்தின் வடபால் உள்ள மானிப்பாயில் உள்ள புதுமடம் புண்ணியபதியிலே விளங்குவது ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயமாகும்.

நூறு ஆண்டுகளுக்கு முன் நகரபெருமானார் ஒருவர் முன் முனிசிரேஷ்டர் ஒருவர் தோன்றி இவ்வாலயம் அமைந்துள்ள அரச மரத்தடியைக் காட்டி ''யான் ஓமந்தை விநாயகர் ஆலயத்திலிருந்து களைத்துப்போய் வந்திருக்கின்றேன், என்னை உபசரிப்பாயாக!'' என்று கூறிச்சென்றதாக அறிகிறோம். சைவப்பெருங்குடி மக்களின் ஒத்தாசையுடன் 1983ம் ஆண்டு ஆலய கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு சகல திருவிழாக்களும் நடைபெற்று வந்தது. பின்னர் 1949ம் ஆண்டு சில இக்கட்டான நிலமைகளால் ஆலயம் மூடப்பட்டது.

படைப்புக்கு முதலிலே தோன்றி ஓங்கார உருவமாக விளங்குபவர் பிள்ளையார். ஓங்காரம் திருமுகமாகவும் உலகங்களின் தொகுப்பாய் அமையும் இடம்பெருவயிறாகவும் உலகத்தைத்தாங்கும் ஆற்றல்காலாகவும் அமையப்பெற்ற திருமேனியே பிள்ளையார் திருவுருவாகும். பிள்ளையார் ஓங்காரத்தினின்றும் எழுத்தொலிகளை வகுத்து எழுதிக்கலைகளை வளர்ப்பவர் என்பதைக் குறிப்பதற்காகவே ஒற்றை மருப்பு அவரது திருக்கரத்தில் அமைந்துள்ளது. பிள்ளையாரின் மற்றொரு கையிலுள்ள மோதகம் அவர் வயிற்றுள் வைத்துப் பாதுகாக்கப்படும் உலகத்தினை மகிழ்விப்பதன் அடையாளமாகும். பிள்ளையாரது மேற்கரம் ஒன்றில் உள்ளது அங்குசம். இது உயிர்களின் செருக்கை அடங்கும் ஆற்றலைக்குறிக்கும் மற்றொரு மேற்கரத்தில் உள்ளது பாசக்கயிறு உலகத்தை உள்நின்று ஊறுபடுத்தும் அழிவுச்சக்திகளை அடக்கியாளும் திறமை உடையவர் பிள்ளையார் என்பதை இது உணர்த்தும் இவர் தம்மை நினைப்பவருடைய இடையூறுகளை நீக்க வல்லவர் என்பது பற்றி 'விக்கினேசுவரன்' என்னும் பெயர் ஏற்பட்டது.

சித்திவிநாயகப் பெருமானுக்கு அமைந்துள்ள திருக்கோயில் அவ்வூர் மக்களின் ஒத்துழைப்பினாலும் இந்துக்கலாசார அமைச்சின் உதவியினாலும் மீண்டும் செப்பனிட்டு கடந்த 5ம் திகதி குடமுழுக்கு வைபவத்துடன் விழா ஆரம்பமாகி இன்று வெள்ளிக்கிழமை சங்காபிஷேகம் இனிதே நிறைவேறுவது சித்திவிநாயக அருளேயாகும்.

### நாகலிங்கம் வர்ணன்

'அரசின் படிகள் அனைத்தும் வழங்கிய பின்பே

## புனருத்தாரண வரியை கழிக்க வேண்டும்!''

### கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க யாழ். பட்டண கிளை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் புள்ளிப் படிகள் அனைத்தும் வழங்கப்பட்ட பின்பே, தமது சம்பளத்திலிருந்து நாட்டின் புனருத்தாரண வரி ஒரு சதவீதப் பணத்தைக் கழித்துக்கொள்ளவேண்டும்'' என்று கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க யாழ். பட்டணக் கிளை, யாழ். ப. நோ. கூ. சங்கத் தலைவருக்கும், நெறியாளர் குழுவுக்கும் அனுப்பி வைத்துள்ள மகஜரில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''கூட்டுறவு ஊழியர்களாகிய எமக்கு வழங்கப்படும் வேதனம் அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்படும் வேதனத்தைவிட மிகவும் குறைவானது. அத்துடன் காலத்திற்குக் காலம் வாழ்க்கைப் படிக்கேற்ப அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் புள்ளிப் படிகள் அனைத்தும் பூரணமாக வழங்கப்படவில்லை''.

இம்மகஜரின் பிரதிகள் யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர், யாழ். தொழிற் திணைக்கள உதவி ஆணையாளர், கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (மா)

## விக்டோறியா கல்லூரி கட்டிடம் சேதம்

(சுழிபுரம்)

சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி கட்டிடம் ஒன்று தொடர்ந்து பெய்த மழையினால் இடிந்து விழுந்து விட்டது. இக்கல்லூரி விளையாட்டுத் திடல் ஒரே வெள்ளக்காடாகக் காட்சி தருகின்றது. வகுப்பு அறைகளில் வெள்ளம் புகுந்து விடும் நிலையும் காணப்படுகிறது.

கல்லூரி அதிபர் திரு. வே. அருணாசலம் கட்டிடச் சேதம் சம்பந்தமான விபரத்தை சுல்விப் பகுதியினருக்கு தெரிவித்துள்ளார். [கி]

## 'முதியோர்சொல் கேட்டால் இன்பமுண்டு'

(சுழிபுரம்)

முதியோர் சொற்படி நடந்தால் இன்பமாக வாழலாம். இளமைத் துடிப்பு எங்கோ எல்லாம் கொண்டு போய் விடும், கட்டுப்பாடான வாழ்வும் ஒழுக்க நெறியும்தான் வாழ்வை நல்நிலைப்படுத்தும் வாழ்ந்த அனுபவம் முதியவர்களிடம் நிறைய உண்டு. ஆதலால் அனுபவம் உடையவர்கள் எப்போதும் நல்லதையே செய்வார்கள். இவ்வாறு திரு. த. இராசரத்தினம் தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலைய மின்ஒளி ஏற்ற வைபவத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். (இ)

## அகதிகளுக்கு உதவி

(பண்டத்தரிப்பு)

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த ஜூலை மாத கலவரங்களினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வந்துள்ள அகதிகளுக்கு இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளையினரால் இலவச அலுமினியசமையல் பாத்திரங்கள் கடந்த வாரம் வழங்கப்பட்டன.

சங்கானையிலுள்ள வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து சுமார் 800 அகதிகளுக்கு மேற்படி பாத்திரங்கள் வழங்கப்பட்டன.

# "பத்திரிகையாளர்களுக்கு துணிவுவேண்டும்" பாராட்டு விழாவில் 'தினகரன்' ஆசிரியர்

(யாழ்ப்பாணம்)

"பத்திரிகையாளர்களுக்கு துணிவு வேண்டும் எந்தவித மான நெருக்கடிகளையும் சமாளித்து, கஷ்டங்களையெல்லாம் துச்சமென மதித்து, தனது பணியைச் செய்யவேண்டும். இடைவழியில் பத்திரிகைத் துறையை விட்டுப்பயந்து ஓடி விடக்கூடாது"

இவ்வாறு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தலைவரும், தினகரன் பிரதம ஆசிரியரு மான திரு ஆர் சிவகுருநாதன் தமக்களிக்கப்பட்ட பாராட்டுகளுக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வடஇலங்கை பத்திரிகையாளர்சங்கம் திரு. சிவகுருநாதன் யாழ். பல்கலைக்கழக முதுகலை மாணி (எம். ஏ) பட்டம் பெற்றமையைக் கௌரவிக்கு முகமாக யாழ். மாநகரமண்டபத்தில் பாராட்டுவிழா வொன்றினை நடத்தியது. தேநீர் விருந்துபசாரமும் மதியபோசன விருந்தும் இத்தோடு அளிக்கப்பட்டது.

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தலைவர் திரு எஸ். எஸ் குஹநாதன் தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு. ஆர் சிவகுருநாதன்தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

நான் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியதும் கொழும்பு சாஹிரா கல்லூரியில் ஆசிரியர் வேலைக்கு விண்ணப்பித்தேன். சில காலம் காத்திருக்க வேண்டியிருந்தது இதற்குள் 'லேக்ஹவுஸ்' ஸ்தாபனத்தில் ஆசிரியர் குழுவுக்கு ஆட்களைக் கோரியிருந்தார்கள். விண்ணப்பித்தேன் வேலை கிடைத்தது. உதவி ஆசிரியராகச்சேர்ந்து, மறைந்த நண்பன் கைலாசபதி வேலையைவிட்டதும் அதன் ஆசிரியரானேன். இருபத்தைந்து வருடங்கள் எப்படியோ கழித்துவிட்டேன். இந்த காலத்தில் எத்தனையோ அனுபவங்களைப் பெற்றுவிட்டேன். அவற்றில் பல வித என் பத்திரிகை அனுபவங்களை நான் எழுதிய எம் ஏ, பட்டத்திற்கான 50 ஆண்டு தமிழ் பத்திரிகை வளர்ச்சிபற்றிய ஆய்வில் எழுதியுள்ளேன் பத்திரிகைத்துறையில் எத்தனையோ விதமான நெருக்கடிகள் ஏற்படும் அவற்றைக்கண்டுபயந்து ஓடிவிடக்கூடாது. பத்திரிகையாளனுக்குப் பரந்த மட்டத்தில் தொடர்புகள் இருக்க வேண்டும். இத்தனை வருட காலத்தில் நான் பலவிதமான தொடர்புகளை சகல மட்டத்திலும் சம்பாதித்ததுதான் என் சம்பாதிப்பு.

"நான் ஏன் இந்த எம். ஏ' பட்டத்தைப் பெற முயற்சித்தேன்? இந்தப்பட்டம் பெற்றதினால் எனக்குச் சம்பளத்தில் மாற்றம் ஏற்படப்போவதில்லை. ஆனாலும் பத்திரிகைத் துறையில் தமிழன் ஒருவன் படித்தவனாக இருக்கிறான். என்பதையே நான் வேலைசெய்யும் ஸ்தாபனத்திலுள்ள மற்றைய மொழி பேசுவோருக்குக்காட்ட வேண்டுமென்ற ஒரு அவா தான்.

திருவாளர்கள் டொமினிக், ஜீவா, கே. டானியல் கலாநிதி ஆ. சண்முகதாஸ், ஆகிச்செல்வன், ஏ. வி. மாணிக்கம், எஸ். திருச்செல்வம், கே. நவசோதி, ஈ. கே. ராஜகோபால் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

## மற்றொரு சங்கமும் பாராட்டு

(வண்ணார்பண்ணை

தேசிய உழைக்கும் பத்திரிகையாளர் சங்கமும் 'தினகரன்' பிரதம ஆசிரியர் திரு ஆர். சிவகுருநாதனுக்கு எம். ஏ. பட்டம் பெற்றமையைப் பாராட்டி யாழ்ப்பாணம் "ஞானம்ஸ், ஹோட்டலில் தேநீர் விருந்துபசாரமொன்றினை நடாத்தியது

யாழ். பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடந்த இப்பாராட்டு விழாவின் ஏற்பாடுகளைத் தேசிய உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் அமைப்பாளர் திரு. எம். செல்வாசாரவும். செயலாளர் எஸ். பாலசிங்கமும் முன்னின்று செய்தார்கள்.

இவ்விழாவில் திரு. எஸ் பாலசிங்கம் தமது வரவேற்புரையில் கூறியதாவது:-

"பத்திரிகையாளர்களாகிய நாம் எமது நாட்டு மக்களுக்கும் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கும் எந்த வகையில் பயன்படுகின்றோம் எந்த அளவில் உதவுகின்றோம் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டிய கடமை பத்திரிகை எழுத்தாளர்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டிய முக்கிய பொறுப்பாக உள்ளது. தேவையற்றவகையில் இலக்கியங்களை ஆராய்ந்து கொண்டிருப்பதைவிட இலக்கியங்கள் மக்களின் கலாசார உயர்வுக்கும், வாழ்க்கை நெறிகளுக்கும், மனிதப்பண்புகளுக்கும், ஆத்மீகச்சிறப்புக்களுக்கும் காட்டியுள்ள நல்ல கருத்துகளை மக்களுக்குப் பயன்பட வெளிப்படுத்த நாம்முயலவேண்டும்."



## பயிற்சி நெறி பழக இந்தியா பயணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி யாழ். மாவட்ட அலுவலகத்தில் கடமையாற்றும் திரு. ஆ இரகுபதி பாலஸ்ரீதரன், மீன்பிடித் தொழிலுக்குக் கடன் வழங்குதல்பற்றிய பயிற்சிநெறி பழகுவதற்காக இந்தியா பயணமானார்.

இந்தியாவிலுள்ள பூனாவில் இந்திய றிசேர்வ் வங்கியினால் நடத்தப்படும் விவசாய வங்கிக் கல்லூரியில் இப்பயிற்சிநெறி நடைபெறுகிறது.

பம்பலப்பிட்டி கதிரேசன் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனான இவர், இணுவில் சபா.ஆனந்தர் தம்பதிகளின் புதல்வராவார்.

## மாமியாரின் தோடுகளை திருடிஞராம் மருமகன்


[மாவிட்டபுரம்]

மாமியாரின் தோடுகளை திருடிய மருமகன் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கட்டுவனைச் சேர்ந்த இராசமணி கந்தையா என்பவரின் 10 0 ரூபா பெறுமதியான இரு தோடுகளை களவாடியதாக அவரது மருமகனை சுப்பிரமணியம் இராசலிங்கம் என்பவர் சந்தேகத்தின்பேரில் காங்கேசன்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இந்நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## வீரசைவ ஜகத்குரு ரேணுகா சிவாச்சாரியர் ஜயந்தி மகோற்சவம்



ஈழநாட்டை ஆட்சிபுரிந்த மாமன்னனாகிய இராவணேஸ்வரன் தனது நாட்டிலே 9கோடி சிவலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்வித்து இப்பூமியை சிவ பூமியாக்கவேண்டுமென்று சங்கற்பம்செய்து கொண்டான். இம்மன்னன் சைவ நாயன்மார்களினாலும் திருமூலர் போன்ற தவஞானிகளாலும் போற்றிப்புகழப்பட்டான்.

இவன் தனது காலத்திலே 6 கோடி லிங்கங்களைப் பிரதிட்டை செய்துமுடியும் தறுவாயில் சிவனார் திருவடிநிழலை படைந்தான். அவன் சிவ ஐக்கியம் அடையும்பொழுது தனது தம்பியாகிய விபீடணனை அழைத்து தனது சங்கற்பத்தின்படி மிகுதி மூன்று கோடி லிங்கங்களையும் பிரதிஷ்டை செய்யுமாறு பணித்தான். விபீடணன் தனது சகோதரனின் கட்டளையைச்சிரமேற்கொண்டு இப்புனித கைங்கரியத்தை இனிது நிறைவேற்ற ஒருமகத்துவமான குருவை வேண்டி மானசமாகத் தியானித்தான். அந்நேரத்தில் ஆகாயமார்க்கமாக வீரசைவ ஜகத்குரு ஸ்ரீமத் இரேணுக சிவாச்சாரியார் இலங்காபுரியுள் பிரவேசிப்பதைக் கண்டான் உடனே அவரைத்தனது அரண்மனைக்கு எழுந்தருளச் செய்து தனது சகோதரனின் பெருவிருப்பை எடுத்தியம்பினன் குருநாதரும் அதற்கிசைந்து ஒரே முகூர்த்தத்தில் மூன்று கோடி மகாசாரியர்களாக எழுந்தருளி மூன்றுகோடி சிவ இலிங்கங்களையும் பிரதிட்டை செய்து விபீடணனை மகா சிவபக்தனாக்கி மணிமகுடஞ் சூட்டித் திருவருள் புரிந்தார். அவ்வாறு மகத்துவமிக்க ஜகத்குருவாகிய இரேணுக சிவாச்சாரியாரின் ஜயந்தி மகோற்சவ வைபவம் பண்டத்தரிப்பு பனிப்புலம் அம்பிகை இல்லத்தில் இன்று நடைபெறுகின்றது.

பனிப்புலம் அம்பாள் ஆலயம்

## இன்றைய பலன்

மாசிமாதம் 5-ம் திகதி
(17—2—84)
வெள்ளிக்கிழமை

மேடம்: இன்று சுவை தரும் நிகழ்ச்சிகள் இடம் பெறும் பிதாவழித் தனமும் சேரும் காதலர்கள் எண்ணங்கள் கைகூடும் வரவிலும் திருப்தி ஏற்படும்.

இடபம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும் இல்லத்திலும் குதூகலம் காணப்படும் படித்தவர்களின் தொடர்பால் பயனடைவீர்கள் இடமாற்றங்களும் சிறப்பாக உண்டு.

மிதுனம்: நீண்டநாள் கனவு இன்று நனவாகும் சகல துறைகளிலும் முன்னேற்றம் உண்டு சிலருக்கு பூமிப்பிணக்குகளும் நிவர்த்தியாகும் வரவும் திருப்திகரமாக அமையும்.

கடகம்: நிதியில் முடக்கம் தோன்றும் வீண்பழிக்கும் ஆளாவார்கள் லக்ஷமிகளின் தொல்லை புதிய உருவெடுக்கும் பயிர்செய்கையில் பாதிப்பு ஏற்படலாம் துணிச்சலுடன் எதிர் நீச்சல் போட்டால் வெற்றி கிட்டும்.

சிம்மம்: இடர்கள் பல தாக்கும் இதயத்தில் எரிமலை குமுறும் உதவி உபத்திரவத்தை தரும் அன்னிய வாசம் அமைதிக்கு உலைவைக்கும் சகல காரி

[7-ம் பக்கம் பார்க்க]


## ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு

கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24810
2. நியூ ப்ரசீதா
இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22480
3. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22537, 22370
4. நியூ லங்கா அலுமீனியம் இன்டஸ்றீஸ் விற்பனவு நிலையம்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
468, காலி வீதி,
கொழும்பு-6
தொலைபேசி: 589190—587680

2. ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
157/8, ஸ்ரீ கதிரேசன்வீதி,
கொழும்பு-11.
தொலைபேசி: 28877




மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
## குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது




இது ஒரு
"மேற்கு ஜெர்மனி 'BASF'"
தயாரிப்பாகும்.

குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 16/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

Metropolitan

M LIMITED மக்வுட்ஸ் ஸ்தாபனம்
2, ஞானார்த்தபிரதிப மாவத்தை,த.பெ.இல.91
(முன்னாள் மருதானைறேட்)கொழும்பு-8.
தொலை பேசி: 597965-9

# 'தரமற்ற விதை உருளைகிழங்கினால் விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு!'

(மானிப்பட்டபுரம்)

"தரமற்ற விதை உருளைக் கிழங்கு விநியோகிக்கப்பட்டதால் யாழ். மாவட்ட விவசாயிகளது உருளைக்கிழங்குச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டு விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே இந்த விவசாயிகளுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்க வேண்டும்"

இவ்வாறு வலி கிழக்கு தென்பகுதி சமநல சேவை நிலைய தலைவர் திரு. செ. ஐயாத்துரை விவசாய அமைச்சருக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் கோரியுள்ளார்.

அம்மகஜரில் மேலும் கோரப்பட்டுள்ளதாவது.

யாழ். மாவட்டத்தில் வலி கிழக்கு தென்பகுதியிலேயே மிகவும் அதிகமாக உருளைக் கிழங்கு செய்கை பண்ணப்பட்டது. ஆனால் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கு ஏற்கனவே நோயினால் பீடிக்கப்பட்டிருந்ததால் அவற்றில் பூஞ்சண வாடல்நோய் ஏற்பட்டு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இம்முறை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கு அவர்கள் விரும்பும் அளவைக் கொண்டதாகவும் இருக்கவில்லை. இதனால் இம்முறை கால்ஏக்கருக்கு 6 முதல் 7 அந்தர் வரை விதைகிழங்கு தேவைப்பட்டது. முன்னரைவிட இம்முறை குறித்த நிலத்திற்கு விதைகிழங்குக்காக கூடுதலான செலவை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

அத்துடன் இம்முறை வழங்கப்பட்ட விதைகிழங்கு உடனே நடக்கூடியதாக முளைசுவிட்டுக் கொண்டிருக்கவில்லை. இதனால் அவை சிறிது காலம் வைக்கப்பட்டிருந்து ஒருபகுதி அழுகியும் சேதமடைந்துவிட்டது.

இம்முறை உருளைக் கிழங்குச் செய்கையை பாதித்தது பூஞ்சண வாடல் நோயாகும்.

ஆகவே தரமற்ற விதைகிழங்கு விநியோகிக்கப்பட்டதால் பாதிப்புற்ற விவசாயிகளுக்கு விதைகிழங்குச் செலவு உட்பட நஷ்டஈடு வழங்க வேண்டும்.

அத்துடன் இனியாவது இறக்குமதி செய்யப்பட்ட ஆக்கா டிசிறி இன விதை கிழங்கினை யாழ். விவசாயிகளுக்கு விநியோகிக்க விவசாயப் பகுதியினர் முன்வரவேண்டும்'

இம்மகஜரின் பிரதிகள் விவசாய பணிப்பாளர், யாழ் மாவட்ட அமைச்சர் யாழ். அரச அதிபர் முதலானோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது

# வலிவடக்கில் நாளை விளையாட்டு விழா

(மானிப்பட்டபுரம்)

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு 18-வது வருடாந்த விளையாட்டு விழா நாளை ஆரம்பமாகி நடைபெற உள்ளது.

வருடா வருடம் இடம்பெறும் இவ்விளையாட்டு விழாவை இம்முறையும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்விளையாட்டு விழாவில் உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் [ஆண்கள்], கரபந்தாட்டம் (பெண்கள்) வலைபந்தாட்டம் (பெண்கள்) எல்லே போட்டிகள், மெய்வல்லுனர் போட்டிகள் என்பன இடம் பெறவுள்ளன

இவ்விளையாட்டு விழாவின் முதற்கட்டமாக இம்மாதம் 18-ம் திகதி உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. இதையடுத்து ஏனைய போட்டிகள் நடைபெறும்

இதற்கான ஒழுங்குகளை வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் திரு. ஏ. முருகையா மேற்கொண்டுள்ளார்.

## இன்றைய பலன்

[6-ம் பக்கத்தொடர்ச்சி]

யங்களிலும் அவதானம் வேண்டும்.

**கன்னி:** எண்ணம் போல் வாழ்வு மலரும் சமூகத்தில் மதிப்பு உயரும் வாகனச்சொந்தக்காரர்களுக்கு முன்னேற்றமுண்டு நண்பர்கள் உதவமுன் வருவார்கள் சாத்தகுணம் நன்மதிப்பைத் தேடித் தரும்.

**துலாம்:** மனக்கவலை மேலோங்கும் சுறுசுறுப்பு குன்றும் கொள்கையில்லோணலும் கோபமும் உண்டாகும் பண விவகாரத்தில் மூலம் பகை தோன்றும் அமைதியே நன்று

**விருச்சிகம்:** தாய்வழி மூலம் நற்செய்தி கிடைக்கும் எதிர்பாராத வகையில் பொருள்வரவுக்கு இடமுண்டு வியாபாரமுமுண்டு வாகன சிறப்பும் அவ்வழி லாபமுமுண்டு

**தனுசு:** வாழ்க்கை இன்று அமைதியாகச் செல்லும் புத்திரரால் பெரும் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு அரசினர் ஆதரவும் கிட்டும் உறவு முறைகள் பலப்படும்.

**மகரம்:** வருமானத்தில் வீழ்ச்சிதென்படும்எதிர்பாராத விபத்தும் ஏற்படலாம் எதிலும் நிதான புத்தியுடன் நடந்து கொள்வது விரும்பத்தக்கது

**கும்பம்:** குடும்பத்தில் அமைதி நிலவும் சாஸ்திரப் பேச்சுமுண்டு கண்ணியமான நாள் பெற்றோரின் ஆதரவும் கிடைக்கும் பிரிந்தவர்களும் இணைவர்.

**மீனம்:** வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றும் கடன் தொல்லைகள் அதிகரிக்கும் சிந்தனையை ஒருவழிப்படுத்தி செயல்படவும் வைத்திய செலவுகளுக்கும்இடமுண்டு பேரைக் கெடுக்க ஊரைக்கூட்டுவர்.

சோதிடக் கலாநிதி
திருமலை
வேலுப்பிள்ளை குவேந்திரன்

## வைத்தீஸ்வராவில் இராமகிருஷ்ண ஜெயந்தி

[யாழ்ப்பாணம்]

இன்று யாழ். வைத்தீஸ்வராவித்தியாலயத்தில் நடைபெறும் சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஜெயந்தி விழாவில் யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி புஷ்பா செல்வநாயகம் சிறப்புரை ஆற்றுவார். பூஜைகூட்டுப் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## மாசிமக விழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய மாசிமக விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்

இன்றுகாலைஸ்நபின அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அம்பாள் புறப்பட்டு சமுத்திரத்தில் தீர்த்தம் வழங்கலும் வீதி உலாவருதலும் சங்காபிஷேகமும் நடைபெறும். (து)

## கலைமகள் சனசமூக நிலையமும் பாடசாலையும்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு கலைமகள் சனசமூக நிலையம், பாலர் பாடசாலை ஆகியவற்றின் நடப்புவருட நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர்: க. சிவஞானம், செயலாளர்: தி. சிவனேசன், பொருளாளர்: இ. ரவீந்திரகுமார் உப தலைவர்: பொ. சிவகுமார், உப செயலாளர்: ஐ. யோகராசா. உப பொருளாளர்: க. கருணாநந்தா. விளையாட்டு, நூல்நிலையப் பொறுப்பாளர்; க. கண்ணதாசன், வெகுஜனத் தொடர்பாளர்: க. முருகையா, 5 பேர் கொண்ட நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

## மகளிர் குழு நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு கலைமகள் சனசமூக நிலையமும், பாலர் பாடசாலையும் மகளிர் குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: எஸ். சுரேகா' செயலாளர்: வே. ராதை, பொருளாளர்: சரோஜாமலர்.

7 பேர்கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## 'கிராம பொருளாதாரம், கல்வி, கலாசாரம் வளர சனசமூக நிலையங்கள் உழைக்க வேண்டும்'

(சாவகச்சேரி)

"கிராமிய மட்டத்தில் இயங்குகின்ற சனசமூகநிலையங்கள் யாவும், கிராமிய மக்களின் பொருளாதாரம், கல்வி, கலாசாரம் போன்றவற்றின் மேம்பாட்டுக்காக உழைக்க வேண்டும்."

இவ்வாறு கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் வருடாந்த இராப்போசன விருந்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆசிரியர் ப. செல்லத்துரை கூறினார். அவர் மேலும் பேசுகையில், "மக்கள் ஒன்றுசேர்ந்து இயங்குகின்ற பணியை சனசமூக நிலையங்கள் செய்துகொண்டு இருக்கின்றன. எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஒரு செயலைச் செய்யும்பொழுது அது சுலபமாக நிறைவுபெறும்" என்றார்.

மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வ. சின்னத்தம்பி, மாதர் சங்கத் தலைவி திருமதி பூமணி சின்னத்துரை கலைவாணிப்பாடசாலை அதிபர் த. கந்தையா ஆகியோரும் உரையாற்றினர்.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பா. தளையசிங்கம், உப-தலைவர்: மா சின்னராசா, செயலாளர்: ச. ஞானராசா, உப-செயலாளர்: கி. குவேந்திரன், பொருளாளர்: ப. சின்னத்துரை. கணக்காய்வாளர்கள்: பொ. செல்லையா, க. சோதிலிங்கம்.

9பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு: | | உதிர்வு: |
|---|---|---|
| 4 | | 18 |
| 11 | | 1 |
| 1909 | | 1984 |



அமரர் வை. சி. நடராஜா

தந்தையே எம் அன்புத்தெய்வமே எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே நினைவாப்பிரகாரம் எம்மை விட்டுப் பிரிந்து ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டுவிட்டீர்களே ஐயா ஐயா! என அழைத்தாலும் ஏன்போடு அரவணைப்பீர்களே இனியார் எமக்கு ஆறுதல் சொல்வார். இனியும் உங்கள் ஆத்மா எங்களைக் காத்து வழி நடத்திச் செல்லும் என்ற நம்பிக்கை கொண்டு எங்கள் கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செய்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மகன், மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.
435/9, கோவில் வீதி, நல்லூர். (838)

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 3-30, 6-00
சிவாஜி-சரிதா
துணை

ஹரன் (யாழ். நகர்)
இரண்டாவது
குதூகல வாரம்!
திருலோகசந்தரின்
சிவாஜி, ஸ்ரீப்பிரியா,
வசந்தத்தில் ஓர்நாள்
(சஸ்மன் கலர்)

சில தினங்கள் மட்டும்
ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்.—லதா
சிரித்து வாழவேண்டும்
(கலர் - புதிய பிரதி)
அடுத்த வெளியீடு
டிக் டிக் டிக்

7 "சூப்பர் ஹிட்" பாடல்களுடன் மக்களை மனங்கவர்ந்த வண்ண யாதலோவியம்.
ரீகல் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15.
கோகிலா... பூர்ணிமா
பயணங்கள் முடிவதில்லை

17-2-84 முதல்
வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா
விஜயகுமார்
மயங்குகிறுள் ஒரு மாது

லிடோ (யாழ்நகர்)
Daily 10-30, 2-15, 4-45
7-15, 9-30
Swamp Thing
(Action film)

வெலிங்டன்
(யாழ் நகர்)
தினசரி 10-30, 2-15,
4-45. 7-15, 9-15
VICTORY AT ENTEBBE
(கலர்)
(Action packedthrill-Film)
இடிஅமினின் உகண்டா நாட்டில் என்டபி விமான நிலையத்தில் ஏற்பட்ட திகிலூட்டும் உண்மைச் சம்பவத்தை நேரில் கண்டுகளிக்க அரிய வாய்ப்பு!

ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
9-00
இந்தியாவில் முதல்முறை திரையிட்டபொழுது தடைசெய்யப்பட்டு மீண்டும் திரையிட்டபொழுது 175 நாட்களுக்கு மேல் ஓடி வசூலில் சாதனை நிலைநாட்டிய படம்.



கமல்— ஸ்ரீதேவி— தீபா
மீண்டும் கோகிலா
(சஸ்மன் கலர்)
இளைஞரின்
இன்பக் காவியம்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00 சிவாஜி-சந்திரபாபு
சபாஷ் மீனா

17ந் திகதி முதல் 19 வரை
மனோகரா (யாழ். நகர்)
10-30, 2-15, 4-45, 7-00
William, Shetaer in
Star Trek II
scope color

இன்றுமட்டும்
சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
Michael Caine,
Omar Sharif, Kabir Bedi
ASHANTI
Action— Scope — Color

'நடிகமணி' வைரமுத்து''

# எதிர்நீச்சலடித்து வளர்ந்தவர்

## பாராட்டு விழாவில் பேராசிரியர் 'வித்தி'

(மானிப்பாய்)

''நாடகக் கலைஞர்களை சமூகம் ஒதுக்கிவைத்து அவர்களைக் கூத்தாடிகள் என்று புறக்கணித்து வைத்திருந்த காலத்தில் நாடகக்கலையின் சிறப்பை உணர்ந்து எத்தனையோ எதிர்ப்புகளுக்கு மத்தியில் எதிர்நீச்சல் அடித்து வளர்ந்தவர் திரு. வைரமுத்து''.

இவ்வாறு நடிகமணி வைரமுத்துவின் மணிவிழாவில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமை உரை நிகழ்த்துகையில் கூறினார்.

கலை இலக்கியப் பத்திரிகை நண்பர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இவ்விழாவில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மேலும் கூறியதாவது:

''வறுமைப் போராட்டம் ஒரு புறமும் சமூகப் போராட்டம் மறுபுறமுமாக இருந்தபோதும் இவற்றைப் பற்றி அதிக அக்கறை கொள்ளாது தனது பணியைச் சிறப்பாகச் செய்தார் திரு வைரமுத்து.

''இப்பணியில் நல்ல பற்றுதலோடு ஈடுபட்ட இவருக்கு அவர் உயிருடன் இருக்கும் பொழுதே நல்லதொரு மணிவிழா எடுத்தமை மிகவும் பொருத்தமானதே

''கலைஞர்கள் இவ்வாறு சிறப்பாகக் கௌரவிக்கப்பட்டால்தான் கலைகள் வளரும். இதனால் சமுதாயம் ஒரு புதுப் பொலிவுபெறும். இவ்வித உற்சாகங்களால் சமூகம் ஒருநல்ல பயனை நிச்சயமாகப் பெறும். கலைஞர்கள் வாழ்ந்தால்தான் கலைகள் வாழும்'' என்றார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி தமது உரையில்-

'கலைஞர் தாம் அனுபவத்தில் கண்ட நல்ல அம்சங்களை மக்கள்முன் படைக்கின்றார்கள். இந்த அனுபவங்கள் மக்களுக்கு நல்லபயன் அளிப்பதாகவே இருக்கின்றது. திரு. வைரமுத்து தம்மைப்பற்றிக்கூட அதிகம் கவலைப்படாமல் கலைத்தொண்டு கொண்டுள்ளார். இவ்வித பண்பட்ட ஒரு கலைஞர் பரம்பரையை உருவாக்க ஆனமுயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் அப்பொழுதுதான் அவர் பேணிக்காத்து வளர்த்த கலை தொடர்ந்து புத்துயிர் பெற்று வாழும் வளரும்'' என்றார்.

தினகரன்' ஆசிரியர் திரு இ. சிவகுருநாதன் பேசுகையில் தேசியப்பத்திரிகைகள் முதல் பக்கச் செய்தியாக மட்டுமின்றி ஆசிரியர் தலையங்கங்களை எழுதவைத்தவர் நடிகமணி வைரமுத்து என்றும் ஈழத்தின் நாடக வரலாறு நூலாக உருவாகும் பொழுது திரு. வைரமுத்துவின் பெயர் முக்கிய இடம் பெறவேண்டுமெனத் தாம் பெரிதும் விரும்புவதாகவும் கூறினார்.

விழாவில் திருவாளர்கள் சசிபாரதி, கே. டானியல், கே. நவசோதி, கே. எம். வாசகர், எஸ். திருச்செல்வம், வி. என் செல்வராஜா, நடமாடி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்கள்.

நடிகமணிக்கு பொற்கிழியொன்றும் வழங்கப்பட்டது. அவரது வாழ்க்கைக் குறிப்புகளுடனான சிறப்புப்பிரசுரமொன்றும் விழாவில் வெளியிடப்பட்டது. காங்கேசன்துறை ராஜராஜநாயகி தியேட்டரில் இவ்விழா நடைபெற்றது.

### விவசாயிகளுக்கு

# வெள்ள நிவாரணம் வழங்குமாறு கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

''அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் மாதகல் கிராமத்திலுள்ள விவசாயிகளின் வெங்காயச் செய்கையும் நெற் செய்கையும் முற்றாக அழிந்துவிட்டது. வாழ வழியின்றி தவிக்கும் இந்த விவசாயிகளுக்கு வெள்ள நிவாரணம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்''

இவ்வாறு மாதகல் கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன் பிரதி சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## காவலூர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆடன் இவ்வடிசாலையுடன், சிறிய வடிசாலைகளை உருவாக்கவும் சபைக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

தனியார் சபை மூலமும்கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் சிறிய வடிசாலைகள் அமைக்கப்பட உள்ளன. இதன் அடிப்படையில் ஊர்காவற்றுறையில் வடிசாலை ஒன்றும், தெல்லிப்பளையில் கூட்டுறவு வடிசாலை ஒன்றும் அமைக்கப்பட உள்ளது என்றும் திரு. நடராஜா தெரிவித்தார்.

## தேர்வும் பெறுபேறும்

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற உயர் தேசிய கணக்கியல் தகுதித் தேர்வு மாணவர்களின் முதலாம் ஆண்டு பெறுபேறுகள் வெளியாகியுள்ளன ஆனாலும் பதினொரு மாணவர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பெறுபேறுக நிறுத்தப்பட்டதற்கு காரணம் இரண்டாம் ஆண்டுக்கான முழுப்படிப்புக் கட்டணமும் செலுத்தப்படாததே எனத் தெரிய வருகிறது.

# இப்படியும் நடக்கிறது

இரண்டு குடும்பப் பெண்கள், மனம்விட்டுப் பேசிக்கொண்டிருந்தனர்.

ஒருவர்: அப்படி என்ன அந்த மனுஷனைப் பற்றிப் பெரிசா கதைக்கிறீங்க......

மற்றவர்: அந்த மனுஷன் அல்லவா பொறுப்புள்ள ஆம்பிள......

ஒருவர்: நீங்கள் சொல்றது விளங்கல்ல

மற்றவர்: அந்த மனுஷன் சைக்கிளில் போகும் போது...... சைக்கிளில் முன்பாக ஒரு பையில் அரிசி இருக்கும். ஒரு கையில் பெரிய தேங்காய் இருக்கும் சைக்கிளின் பின்பாக விறகு இருக்கும். பெரிய தேங்காயையும், விறகையும் மனுஷன் எங்கிருந்துதான் இப்போ வாங்கிறாரோ தெரியல்ல......!

○ ○ ○

நற்பிட்டிமுனை எங்கிருக்கிறது தெரியுமா?

உங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ; நற்பிட்டிமுனை இருப்பது கல்முனையில்தான்.

நற்பிட்டிமுனை உப தபால் அலுவலகத்திலிருந்து திரு. பா. பூபாலரெட்ணம் என்பவர், யாழ்ப்பாணம் திரு. பா. கந்தசாமி என்பவருக்கு ஒரு தந்தியை தமிழில் அனுப்பியிருந்தார்.

குறிப்பிட்ட தந்தியில் அனுப்பியவரின் விலாசம்...... நாய்ப்பட்டிமுனை என்றிருந்தது.

தந்தியில் உள்ள உப தபால் அலுவலகத்தைப் பார்த்தேன். அதிலும் நாய்ப்பட்டிமுனை என்றுதான் இருந்தது!

நாய்ப்பட்டிமுனை இப்போது எங்கே இருக்கிறது? அஞ்சல் சேவையினரின் [நாய் வர்க்கம் நன்றிப்பார்களாக] இது சமர்ப்பணம்!

"ஊடுருவி"

# பரந்தன் - முல்லைத்தீவு வீதி படுமோசமாம்

(விசுவமடு)

பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியில் வெலிக்கண்டல் சந்திக்கும், புளியம்பொக்கணைக்குமிடையிலுள்ள ஒன்றரை மைல் தூரமான பாதையில் வாகனங்கள் போக்குவரத்துச்செய்ய முடியாதபடி பழுதடைந்து குன்றும்குழியுமாகக் கிடக்கிறது. இங்கு பெய்த பெருமழையினால் இவ்வீதியில் 4 அடி வெள்ளம் பாய்ந்தது. இதனால் வீதிப் போக்குவரத்து முற்றாகவே தடைப்பட்டிருந்தது. அவ்வேளை இவ்வீதியால் பிரயாணம் செய்தவர்கள் இருமருங்கிலும் வாகனங்களிலிருந்து இறங்கி இந்தத் தூரத்தை கம்பிகள், கயிறுகள்மூலம் தாண்டி மீண்டும் பிரயாணத்தைத் தொடர்ந்தனர்.

தற்போது பெய்துவரும் பெருமழையினாலும் இவ்வீதியில் பெருவெள்ளம் பாய்கிறது.

இப்பகுதியில் பிரதான வீதியாக இது இருப்பதினால் முக்கிய விவசாயப் பகுதிகளான முரசுமோட்டை, புளியம்பொக்கணை, விசுவமடுப் பகுதியிலுள்ள விவசாயிகள் தமது விளைபொருட்களை விற்பனை செய்யவோ, தமக்குத் தேவையான இதர பொருட்களை கொள்வனவு செய்யவோ முடியாத கஷ்டநிலை இப்போது ஏற்பட்டுள்ளது. அத்துடன் மேற்கூறிய இடங்களிலுள்ள நோயாளர்களும் இவ்வீதி சீர்கேட்டினால் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள்.

இதற்குப் பொறுப்பான பகுதியினர் இவ்வளவு சீர்கேடு ஏற்பட்டபோதும் இதுவரை எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

விசுவமடுசனசமூகநிலையத்தலைவர் திரு. கி. ஆறுமுகம் இதுதொடர்பாக அண்மையில் யாழ். பிரதேச பெருந்தெருக்கள் திணைக்களப் பிரதம பொறியியலாளருடன் தொடர்புகொண்டு உண்மை நிலையை எடுத்து விளக்கியுள்ளார்.

## இ. போ. ச...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தபோதிலும், அதற்கான வேலைகளை ஆரம்பித்தார்.

அத்திவாரம் போடப்பட்டு பலத்தமழை, வெள்ளத்தின் மத்தியிலும் கட்டட வேலைகள் நடைபெற்று வந்தது.

திடீரென மேலிடத்து உத்தரவைத் தொடர்ந்து மலகூட வேலைகள் இப்போது நிறுத்தப்பட்டுள்ளது. (க)

## சட்ட மேலவை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கவைச் சேர்ந்த திரு ஜி. சுவாமிநாதன் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

தமிழ்நாடு சட்ட மேலவை துணைத்தலைவர் பதவியை வகித்துவந்த திரு. புலமைப்பித்தனின் பதவிக்காலம் கடந்த டிசம்பர் மாதத்துடன் முடிவடைந்ததையடுத்தே திரு. சுவாமிநாதன் புதிய துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். (வெ

## பொலநறுவ முகாமுக்கு 50பேர் செல்வர்

(மன்னார்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் பொலநறுவையில் இம்மாதம் 25ம் தேதி முதல் 29ம் திகதிவரை நடத்தப்படும் இளைஞர்முகாமில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 50 இளைஞர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்

இவர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று இம்மாதம் 10, 11, 12-ம் திகதிகளில் எருக்கலம்பிட்டி மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

# பொலிஸாருக்கு தகவல் கொடுத்தவர் சந்தையில் வாள்வெட்டுக்குள்ளானார்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நடந்த கொலைச் சம்பவமொன்றில் ஈடுபட்டவர்களை பொலிஸாருக்கு காட்டிக்கொடுத்ததாகக் கூறப்படும் ஒருவர், பட்டப்பகலில், வட்டக்கச்சி சந்தையில் பலத்த வாள்வெட்டுக்குள்ளானார்!

வாளினாலும், இரும்புக்கம்பியினாலும் தாக்கப்பட்ட வட்டக்கச்சியைச் சேர்ந்த 23வயது இளைஞர் கந்தையா சிவசுந்தரம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இரு இளைஞர்கள் சந்தையில் வைத்துத் தாக்கியதாகவும், ஒருவர் வாளால் வெட்ட, மற்றவர் இரும்புக் கம்பியால் அடித்ததாகவும், பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தாக்கியவர்களில் ஒருவரை, கிளிநொச்சியில் நடந்த கொலைச் சம்பவம் தொடர்பாக காயமடைந்தவர் பொலிசாருக்குக் காட்டிக் கொடுத்ததாகவும், அவர் வட்டக்கச்சி சந்தையில் வைத்து மற்றொரு இளைஞருடன் சேர்ந்து தாக்கியதாகவும் கூறப்படுகிறது. சந்தேக நபர்களான, துரை, செல்வம் ஆகியோரைப் பொலிசார் தேடிவருகின்றனர். (ச)

## சட்டவிரோத..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பல 'வெல்டிங்' தொழிற்சாலைகளில் ஒரு இயந்திரத்திற்கு மின்சாரம்பெற மின்ணைப்பித்து இரண்டு இயந்திரம் பாவித்த தொழிற்சாலைகளின் மின் இணைப்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

## வெள்ளப்பகுதி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று 32 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திலும் நேற்று 41 மில்லி மீட்டர் மழைபெய்தது. அம்பாறை, பொலனறுவ மாவட்டங்களிலும் பெரும் மழை பெய்துள்ளது.

சேனநாயக்கா சமுத்திரத்தில் 97 அடிக்கு நீர்மட்டம் உயர்ந்துள்ளது 110 அடிக்கு நீர்மட்டம் உயர்ந்தால் இச்சமுத்திரம் பெருக்கெடுக்குமென்று தெரிவிக்கப்பட்டது

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமூகசேவைகள் திணைக்களம் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது [வெ[

# அகதிகள்முகாமில் திருமணம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி அகதிகள் முகாமைச் சேர்ந்த தியாகராஜா என்னும் மணமகனுக்கும் மாத்தளையைச் சேர்ந்த மணமகளுக்கும் வட்டக்கச்சி அகதிகள் முகாமில் இன்று திருமணம் நடைபெறுகின்றது.

மணமகன் மாத்தளையில் சொந்தமாக கடை நடத்தி வந்தார், கலவரத்தின்போது இவரது சகல உடமைகளும் அழிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இத்திருமணத்தை முகாம் நிர்வாகிகள் ஏற்பாடு செய்துள்ளனர்

# குளத்தில் மூழ்கி மரணம்

(வவனியா)

வவனியா குளத்தில் மூழ்கி மரணமான வைரமுத்து நல்லையா என்பவரின் மரணம் விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது

வவனியா மேல்நீதிமன்றச் சேவகரான சங்கானையைச் சேர்ந்த இறந்தவர் சுமார் 20 வருடம் சேவை புரிந்திருக்கிறார் வவனியா மாவட்ட பதில் நீதவான் ஆர். வி. வில்வராஜா இவரது மரணம் தொடர்பான விசாரணையை நடத்தினார்.

விசாரணையின்போது இறந்தவருடன் குளிக்கச் சென்ற நீதிமன்ற முதலியார் இராமலிங்கம் சாட்சியமளித்தார் இறுதியில் விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (கி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி 78-ம் இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under No. [illegible] Eelanadu P. O. Box 49 Telephone 22389 24126